Born Bowie

V1. No. 5 2 Feb 1928

©

JL
0072 H, N28 K14
N28 1.5
188988

664

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரு. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரு. 7 8 0
புற நாடு ... ... ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

8 MAY 1928 MADRAS

Vol 1.] 1928ஞ பிப்ரவரிமீ 2உ [No. 5.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	செய்யும் கருமமும் செயல் வகையும்.	81
2.	தமிழ்ப்பாடம்.	83
3.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A. B. L.	86
4.	காந்திமதி (A novel) T. N. சேஷாசலம் B. A. B. L.	88
5.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L.	90
6.	இராஜ்ய தந்திரம்	93
7.	மலர் வனம்	95
8.	மதிப்புரை	97
9.	கடிதம்	98
10.	வர்த்தமானம்	98

கலா நிலயம்.

செய்யும் கருமமும் செயல் வகையும்.

188988

IV

தொழிற்பயிற்சிமுதல் பாஷைப்பயிற்சி ஈருக உள்ள பலவற்றினின்றும் கலையின துணர்ச்சியை வேறுபடுத்தி, அக்கலையாலன்றி மற்றவைகளால் வாழ்க்கையின் பயன் எய்துதற்கு இயலாது என்று இதுகாறும் கூறிவந்தோம். இம்மையும் மறுமையும் ஒருவனுக்கு உரிமையாவது அவன்றன் மனமமர்ந்த நிலையினைப் பொருந்தியதொன்றே என்பதும், அம்மனந்தான் உரியதன்மை அடையாதகாலத்து எத்துணைச் சாதனங்கள் அயல்நின்று அமைத்துவைத்தாலும் நாடியநலம் கைகூடாது என்னுமொரு உலகறி உண்மையையும் மீண்டுமோர்முறை நம்நினைவிற்கு வருவித்துக்கொள்வது இங்கு மிகையாகாது. பொதுவினில் உரைக்கும் போலி வகைகளைவிட்டுச் சிறப்புப்பொருளில் கல்வியென்னும் அக்கலைகளே மனதைச் செப்பனிட்டு அறிவூன்றி அறம்வளர இன்பம்பழுத்து வாழ்க்கையெனும் நற்றேன் உலகெங்கும் கிளர்ந்துபாய முழுமுதல் ஆதாரமாகும் என்பதும் முன்னங்கு இயம்பியுள்ளோம். மற்றினிக் கலையுணர்வு மனதைத்தேர வைக்குமாறு எவ்வாறு என்னுமிதைச் சிறிதளவு விளக்கவும் இங்கு முயல்வோம்.

இம்முயற்சியோ கைகூடுவது அருமை. கலையின் பழக்கத்தால் மனமானது எய்துகின்ற நிலையினை எடுத்தோத எளியதன்று. இதைப்பற்றி நாம் நினைக்கின்ற நினைவிற்கு அதை உரைக்கவரும் சொற்கள் இடறியிடறி வெகுதூரம் பின்பட்டே வருகின்ற கஷ்டத்தைப் பலர் தத்தம் அனுபவத்தால் அறிந்திருப்பர். ஏனெனில், கலைகள்யாவும்ஓரேதத்துவத்தின் பலவகைப்பட்டதோற்றங்கள். அத்தத்துவம்யாதெனில் அழகெனும் அதுவே. மனதிற்கு ஒருவாறு எட்டியதாக பாவனை புரிந்தாலும் வாக்கிற்கு அடங்காத் தன்மையில் இவ்வழகு தன் தத்துவத்தில் பரம்பொருளையே ஒக்கும். ஒன்றனைக் கருதி 'இது அழகாயிருக்கின்றது' என்பவனை, அவ்வாறு நினைப்பதற்குக் காரணம் யாதெனக் கேட்டால் என்னுரைப்பான்? உரைபல பெருக்கி முயற்சியால் சொற்களைத் தேர்ந்தும் மாற்றியும் உதாரணங்கள் காட்டியும் வெகு பாடுபட்டாலும், அவனது கட்டுரையெல்லாம், 'அழகா யிருக்கின்றதென்றால்— அ ழ கா யி ரு க் கி ன் ற து' என நிறுத்தி அழுத்திய எழுத்துக்களின் அளவிலேயே முடியும். அழகினது உணர்ச்சியால் தோன்றுகின்ற கலைகளுக்கும் உரைக்கப்படாத அத்தன்மை உளது.

சங்கீதம் காவியம் சிற்பம் சித்திரம் நடனம் அனைய கலைகள் ஒருவனதுள்ளுதற்கே உரியதாய அழகின் உணர்ச்சியால் உள்ளத்தில் உதித்து உள்ளத்தில் வளர்ந்து மற்றையவர் உள்ளத்தைப்பற்றி உள்ளத்தில் உறைவதாகும், ஆதலால் அவைகளின் தன்மைகளைக் கண்ணும் காதாலும் மற்ற இந்திரியங்களின் வாயிலாலும் தெரிந்துகொள்ள இயலுமேயல்லாது காட்டவும் சொல்லவும் எவ்வாறு அமையும். சங்கீதம் ஒலியின் திரளாலும், காவியம்

மொழியின் தொடர்பாலும், சிற்பம் உருவத்தினமைப்பினாலும், சித்திரம் வரியொடு வர்ணங்களின் சேர்க்கையாலும், நடனம் அவயவ அசைவினாலும், மனதில் கிளர்ந்தெழும் அழகைத் தோற்றுவிக்கின்றன. ஆக்கியோன் மனதிற் கிசைந்த சுருதியில் இருக்கின்ற மனமுடையார் அதை ஏற்று அநுபவிப்பவராவர். இந்தச் சுருதி பழக்கத்தில் கூடுகின்றது. எதனொடு பழகுகின்றமோ அந்தத் தன்மையை அடைவது மனதிற் கியற்கை. அழகின் தோற்றங்களாய கலைகளுடன் பழகப்பழக எவர் மனமும் அழகிற்கு உறைவிடமாய் அமைந்துவிடும். அமைந்துவிடப் பின்னும் பின்னும் இக்கலைகளைப் பயிலுந்தோறும் பயிலுந்தோறும் உறைந்த அவ்வழகு நம் வாழ்க்கையோடு குழைந்து நினைப்பன சொல்வன செய்வன யாவும் அழகு பிறழா நிலையினை எய்துகின்றன. இதைத்தான் மனம் பண்பட்ட நிலையென்று முன்னர்க் கூறினோம். நல்ல வாழ்வினிற் கமைந்த முதற்பாடமும் இதுவே.

ஆயின், கலைகளை முதற்பாடமாய்க் கூறுவது ஏனெனில் ஒரு காரணமுளது. கலைகள் அழகினின் தோற்றங்கள் என்று செப்பினோமே யல்லாது அவையன்றிப் பிற எதனிலும் அழகில்லை என்று எண்ணப்படாது. அழகெனும் தத்துவம் அவ்வளவும் கலைகளோடு முடிந்துவிடுவதில்லை. இந்தத் தத்துவம் ஒன்றே, உணர்ச்சிக்கு அழகென்றும், செய்கைக்கு அன்பென்றும், புத்திக்கு மெய்ப்பொருளாம் கடவுளென்றும் எட்டுகின்றதாகின்றது. செய்கைக்கு ஒன்று சாத்தியமாவதையும் புத்திக்கு ஒன்று நிச்சயம் ஆவதையும்விட உணர்ச்சிக்கு ஒருவன் ஆளாவது மிகவும் எளியது! ஆகையால் உணர்ச்சிக்குப் பொருளாய அழகினில் முதிர்ந்தக்கால், செய்கைக்கு உரியதாய அன்பு எளியதும் இயற்கையும் ஆகிப் பின் புத்திக்கு இலக்காய மெய்ம்மையும் எய்திவிட இயையும். பின்னிரண்டும் படிப்படியாய் எய்துதற்குக் கலைபுகட்டும் அழகு எளிய உருவத்தில் அமைந்திருப்பதால் அது அறம் பொருள் இன்பம் வீடு எனும் பிறவிப்பயன் நான்கினையும் புகட்டுதற்கு ஏற்ற பாலபாடம் எனச் செப்பினோம்.

முதற்பாடமா யமைந்த இக்கலையினது அழகு மனதின் உணர்ச்சியாக முதிர முதிர அதுவே அன்பாயும் மெய்ம்மையாயும் விரவிவருகின்ற விதத்தை அறிந்துகொள்வது அரியதன்று. கலையினது உணர்ச்சிக்கு வயப்பட்ட வாழ்க்கையினில் அழகிற்கு மாறுன எண்ணத்தின் எண்ணமும் அவ்வெண்ணத்தால் விளையும் முறை பிறழ்ந்த சொற்களும் செய்கையும் கனவினிற்காணும் கனவினிற் கூட தோன்றுவது எங்ஙனம்! அழகுநிறைந்து குடிபுகுந்த மனத்தினில் வேறெதெற்கும் இடமில்லை. பெருந்தன்மை வாய்ந்த நினைவும் மொழியும் செய்கையும் யாவும் அழகியன. அவை மூன்றும் அற்பமாயின் விகாரம். பிறர் கிடக்கத் தனக்கொன்று வேண்டுவது அற்பம். என்னுரிமை நின்னுரிமை என மாறுபட்டு இடும் வழக்கு அற்பம். தன்னையே நினைத்து விவகரிப்பதெல்லாம் தாழ்மையினும் தாழ்மையாய விகாரச் செயல்கள். ஐம்புலன் இழுத்த வழிதொடர்வதால் விளைகின்ற காமமாதி அறுவகைப் பாவங்களும் அழகினிற்குத் தலைகீழாய் நிற்கும் மனோ விகாரங்கள். நெஞ்சத்து அழகுடையான்மாட்டு இவையாவும் நேரா, அணுகா. நின் கன்னமொன்றில் அடித்தபேர்க்கு மற்றதையும் காட்டுவதோ, மற்று அவன் இருகன்னத்திலும் அறைவதோ யாதோ, அமைதியுடன் ஆராய்ந்தால், அழகுடைத்து. அடிபொறுப்பது பெருந்தன்மை, அடிக்கு அடி கைமாற்றுவது அற்பம். இதைச் சொல்லளவில் ஏற்காதார் வெகு சிலர். எனினும் அழகுபயிலும் பெருமனத்தவர்க்கே இப்பொறுமை இயற்கையாய் இயலும். உள்ள சிறு உணவையும் உதவிவிட்டுப் பசித்துத்தான் இருப்பதோ, பசித்திருப்பவருணவைக் கவர்ந்துவந்து புசிப்பதோ, ஏதழகுடைத்து! தீங்கெவரும் நமக்கிழையார் என நம்பி வாழ்வதோ, அல்லது, கண்டவரனைவரையும் கள்வராய் மதித்துக் காவல் தேடுவதோ அழகு! அழகிற்கு ஈடுபட்ட மனந்தான் அற்ப நினைவையும் சொற்கள் செயல்களையும் ஏற்காது அன்புநிலை எய்துகின்றது. எய்தி, 'அரவுயர்த்தோன் கொடுமையினும் முரசுயர்த்தோன்' அருளிற்கு அடங்கி நடக்கும். 'இன்னுயிரேனும் கொள்வது தீது கொடுப்பது நன்று' என முன்னும் பின்னும் எண்ணாது, 'கொள்ளென முன்பு கொடுப்பது' மாகும். 'மன்னுயி ரோம்பும் இம்மா பெரும் பாத்திரம் என்னுயிர் ஓம்புதல் யானோ பொறேன்' என்று இமைப்பொழுதினில் துணிந்துகொள்ளும்.

எண்ணமும் செய்கையும் இன்னவாறு அழகினது ஆட்சியி லிருக்குமானால் பின், தன்னால் பிறர்க்கேனும் பிறரால் தனக்கேனும் துன்பமேது? இம்மைக்குரிய மெய்யின்பம் அழகின் பாடம் கற்றவன் அடைகின்றானாலும், அது தானாக வந்து விளைகின்றதே யல்லாது இந்த இன்பம் பெற வேண்டும் எனும் நோக்கத்தோடு அன்பு பாராட்டினவனல்லன். இல்லையெனில் அன்பின் கூலி இன்பம் தனக்கு, என்னும் நிலையில் வந்துவிடும் கூலிக்குச் செய்யும் வேலையெதுவும் அழகுடையதன்று. அழகற்றதற்கு அவன் மனதில் இடமில்லாதிருக்க எவ்விதக் கைக்கூலியின் நினைவும் அவனுள்புகாது. எனினும் இன்பமும் அவ்வழகின் ஒரு நிலையே என்று காட்டுதற்கு இங்கிதைச் சொன்னோம்.

இவ்வளவு அழகுநிறைந்த வாழ்க்கை யுடையவனுக்கு உலகெங்கும் அழகே தோன்றித்திகழ்வது இயற்கை. எப்பொருளிடத்தும் யாவர் மாட்டும் அழகே காண்கின்றான் உள்ளத்திலே அழகுடையவனுக்கு இருக்குமிடமெல்லாம் அழகு தான். அது இல்லாதவன் ஊரூராய்த் தேசம் தேசமாய்ப் போய்த் தேடினாலும் அவ்வழகைக் காண்கிலன். 'தனக்கு வியஞ்சியது கர்மம்', என்னும் அந்தப் படுபாவக் கொள்கையினின்று அழகு அவனை நீக்கி அன்புள் புகுத்தியதுபோலவே அவ்வன்பு பின்னும் பிரபஞ்சத்தின் அழகிற்குள் செலுத்தி அப்பிரபஞ்சத்தோடு கரைத்துவிடுகின்றது. தன்னையும் துறக்கும் தன்மை அன்பிலே தங்கியுள்ளது. சிருஷ்டியைப் பார்க்கிலும் அச்சிருஷ்டியுமேயாய அப்பரம் பொருளைவிடவும் அழகுடையது எது. இவனது உள்ளத்திலிருந்து செய்கையாய்வளர்ந்த அவ்வழகு புறமென்று இதுகாறும் மயங்கி நின்ற பிரபஞ்சத்தி னழகோடு இரண்டறக் கலந்து தன்னையே யவன் துறந்து விடுகின்றான். பிரபஞ்ச மடங்கலும் அவனுள் ஒடுங்குவதும், மற்று அவனே பிரபஞ்சமயமாகிவிடுவதும் நேர்கின்றன. வேற்றுமை இல்லையெனும் அம்மெய்நிலை அவனது புத்தியுள் எய்துகின்றது. ஆன்மகதிக்கும் அழகு ஆதாரமாகின்ற விதம் இவ்விதமே.

தமிழ்ப் பாடம் 5.

நளவெண்பா

சுயம்வர காண்டம்.

(71-வது பக்கத் தொடர்ச்சி)

11. தேரிற்றுகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரிப் புனனனைப்ப வேயடைந்தான்—கார்
[வண்டு
தொக்கிருந்தா லித்துழலுந் தூங்கிருள்வெய்
[யோற்கொதுங்கிப்
புக்கிருந்தா லன்ன பொழில்.

பதப்பிரிவு:—தேரின் துகளை திருந்து இழையார் பூ குழலின் வேரி புனல் நனைப்பவே அடைந்தான் கார் வண்டு தொக்கு இருந்து ஆலித்து உழலும் தூங்கு இருள் வெய்யோற்கு ஒதுங்கி புக்கு இருந்தால் அன்ன பொழில்.

அன்வயம்:—திருந்து இழையார் பூங்குழலின் வேரிப் புனல் தேரின்துகளை நனைப்ப (சென்று), கார்வண்டு தொக்கு இருந்து ஆலித்து உழலும் தூங்கு இருள் வெய்யோற்கு ஒதுங்கி புக்கு இருந்தால் அன்ன பொழில், (நளன்) அடைந்தான்.

கருத்து:— தேர் செல்வதால் எழுந்த புழுதியைப் பின்தொடர்ந்து வந்த மாதர்களது கூந்தலில் அணிந்த பூவினின்று ஒழுகிய தேன் நனைத்து அடக்க, நளன் சென்று வண்டுகள் நிறைந்தும்,மரஞ்செடிகளின் அடர்த்தியால் இருண்டும் இருந்த சோலையை அடைந்தான்-

பதவுரை.

கார் - கருமையான
வண்டு - வண்டுகள்
தொக்கு - சேர்ந்து
இருந்து - இருந்து
ஆலித்து - சப்தம்செய்து
உழலும் - சஞ்சரிக்கும்,
தூங்கு - தங்கிய
இருள் - இருளானது
வெய்யோற்கு - சூரியனுக்கு
ஒதுங்கி - (பயந்து) விலகி
புக்கு - புகுந்து
இருந்தால் அன்ன - இருந்தது போன்ற
பொழில் - சோலையை,
தேரின் - தேர்செல்வதால் எழும்
துகளை - புழுதியை
திருந்து - நேர்மையான
இழையார் - ஆபரணங்களையணிந்த மாதர்களது
பூ - பூக்களணிந்த
குழலின் - கூந்தலினின்று வழிகின்ற
வேரி - தேனாகிய
புனல் - நீர்
நனைப்பவே - நனைத்து அடக்கவே
அடைந்தான் - (நளன்) சேர்ந்தான்.

விளக்கம்:—அடைந்தான், (பயனிலை). [எவன் அடைந்தான்? நளன் (தோன்ரு எழுவாய்)] எதை அடைந்தான்? பொழில் அடைந்தான் - பொழிலை அடைந்தான். எதைப்போன்ற பொழில்? புக்கு இருந்தால் அன்ன பொழில் - புகுந்து இருந்ததைப் போன்ற பொழில். எது புக்கு இருந்தால் அன்ன பொழில்? இருள் - இருட்டு. எப்படிப்பட்ட இருள்? தூங்கு இருள்-தங்கிய இருட்டு. இருள் ஏன் புக்கு இருந்ததாம்? ஒதுங்கி - (பயந்து) விலகி. யாருக்கு ஒதுங்கி? வெய்யோனுக்கு - சூரியனுக்கு. சூரியனுக்குப் பயந்து சோலையில் வந்து ஒளிந்திருக்கும் இந்த இருட்டு எப்படிப்பட்டது? உழலும் இருள் - சஞ்சரிக்கப்பெற்ற இருட்டு. எவை உழலும் இருள்? வண்டு - வண்டுகள். எப்படிப்பட்ட வண்டு? கார்வண்டு - கரியவண்டுகள். கார்வண்டு எப்படி உழலும்? ஆலித்து உழலும் - ஆரவாரம் செய்து சஞ்சரிக்கும். எப்படி ஆரவாரம் செய்யும்? இருந்து. எப்படி இருந்து? தொக்கு இருந்து - ஒன்று சேர்ந்து இருந்து. கரியவண்டுகள் ஒன்றுசேர்ந்து இருந்து ஆரவாரம் செய்து உலவப்பெற்ற அத்தங்கிய இருள்களெல்லாம் (தமக்குப் பகையாகிய) சூரியனுக்குப் பயந்தோடிவந்து ஒளிந்திருக்கின்றனவோ என்று கண்டவர்கள் சொல்லும்படி, மரஞ்செடிகளடர்ந்து இருண்டிருந்தசோலையை நளன் சென்றடைந்தவிதம் என்ன? நனைப்பவே அடைந்தான் - நனைத்து அடக்கிவிடும்படி அடைந்தான். எதுநனைப்ப? புனல் நனைப்ப - நீர் நனைப்ப. எந்தப்புனல்? வேரிப்புனல் - மதுநீர் - தேன்ஆகிய நீர். எங்கிருந்து துளித்த வேரி? குழலின் -கூந்தலிலிருந்து. எதை அணிந்த கூந்தல்? பூ - பூக்களை. யாருடைய பூங்குழலின் வேரிப்புனல்? இழையார் - ஆபரணங்களை அணிந்த மாதர்களுடைய. எப்படிப்பட்ட இழையார்? திருந்து இழையார் - நேர்மையான ஆபரணங்களையணிந்தவர்களுடைய. திருந்திய ஆபரணங்களை யணிந்த மாதர்களது பூக்கள்சூட்டிய கூந்தலில்இருந்து துளித்த தேனாகிய நீர் எதை நனைப்ப, நளன் பொழிலை அடைந்தான்? துகளை - புழுதியை. எந்தத் துகளை? தேரின் துகளை. நளன் ஏறிய தேர்சென்றதால் வீதியில் எழுந்த புழுதியைப் புனல் நனைப்ப நளன் பொழில் அடைந்தான்.

விரிவுரை:— இந்தச் செய்யுளும் 9-வது செய்யுளும் சேர்ந்து இச்சிறு காவியத்தினுள் உலா என்னும் உறுப்பில் அமையும். உலா என்பது, கதாநாயகன் உலாப் போகின்ற வைபவத்தை வர்ணிக்கின்ற பாகம். அவன் வீதியில் பவனிவரும் சிறப்பையும் அழகையும் அதனைக் கண்ட மாதரும் பிறரும் அவனைக்கொண்டாடும் விதத்தையும் பாடவேண்டுமென்பது, நீர்வளம் திணைவருணனை திணைமயக்கம் போன்ற, காவிய இலக்ஷணங்களில் ஒன்று. பெருங்காவியங்களில் அரசபவனியைப் பற்றிப்பாடும் செயுள்கள் பல இருக்கும். இராமன் மிதிலாநகரத்தில் திருமணத்திற்குமுன் உலாவந்த அழகையும் அப்பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் சிறப்பிக்கக் கம்பர் ஒருபடலமே தனியாகப்பாடி யிருக்கின்றார். பால காண்டத்தில் இருக்கும் உலாவியற்படலம் என்பது அப்படலம். சீவகனது உலாவைத் திருத்தக்கதேவர் சிந்தாமணியில் பாடிய செய்யுள்களை இலக்கணையார்இலம்பகத்தில் காணலாம். உலாவப்போகும் பெருமகனைக் காணுமாறு மாதரெல்லாம் வீதியில் விரைந்து வந்து அடைதலும், அவனழகில் ஈடுபட்டு உள்ளம் குழைதலும், மயல்கொண்டு அம்மாதர்காமப்பரவசராகி அவனைத்தொடர்ந்து ஏகுவதும், ஏகி அவனை வியந்து புகழ்வதும், இவைபோன்ற பிறவும் 'உலா' என்னும் காவிய அங்கத்

திற்கு இலக்கணமாகும். 9-வது செய்யுளில், வதனமதி பூத்த குவளைக்காட்டிடையே போயினான், என்று கூறியதால் மாதரார் கண்களுக்கெல்லாம் நளன் இலக்காயினான் என்பதும், இச்செய்யுளில் வேரிப்புனல் தேரின் துகளை யடக்கியது என்றதால் அவர்கள் இவன்தேரைத் தொடர்ந்து மொய்த்தனர் என்பதும் தெரியலாகும்.

12. நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப- மாணி
[றத்தான்
முன்னப்புட் டோன்று முளரித் தலைவைகு
மன்னப்புட் டோன்றிற்றே யாங்கு.

பதப்பிரிவு :—நீள் நிறத்தால் சோலை நிறம் பெயர நீடிய தன் தாள் நிறத்தால் பொய்கை தலம் சிவப்ப மாண் நிறத்தான் முன் அப்பு உள் தோன்றும் முளரித்தலை வைகும் அன்ன புள் தோன்றிற்றே ஆங்கு.

அன்வயம் :—ஆங்கு, அப்புஉள் தோன்றும் முளரித் தலை வைகும் அன்னப்புள், நீள்நிறத்தால் சோலை நிறம் பெயர, நீடியதன் தாள் நிறத்தால் பொய்கைத்தலம் சிவப்ப, மாண்நிறத்தான்முன், தோன்றிற்று.

கருத்து:—அந்தச்சோலையில் நளனுக்குமுன்னால் அன்னப்பறவை யொன்றுவந்து தோன்றியது.

பதவுரை

ஆங்கு - அவ்விடத்தில்,
அப்புஉள் - நீரினுள்
தோன்றும் - முளைக்கின்ற
முளரித்தலை - தாமரையில்
வைகும் - வசிப்பதாகிய
அன்னப்புள் - அன்னப்பறவை யொன்று (தனது)
நீள் - ஒளி (பொருந்திய)
நிறத்தால் - (சிறகின் வெண்மை) நிறத்தினால்
சோலை - (அந்தச்) சோலையினுடைய
நிறம் - (பசுமை) நிறமானது
பெயர - மாறவும்,
நீடிய - நீண்ட
தன் - அதனுடைய
தாள் - கால்களது
நிறத்தால் - (சிவந்த) நிறத்தினால்
பொய்கைத்தலம் - தடாகங்கள்
சிவப்ப - சிவந்து காட்டவும்,
மாண் - பெருமைதங்கிய
நிறத்தான் - மார்பையுடைய நளனுக்கு
முன் - எதிரே
தோன்றிற்று - வந்து தோன்றியது.

அன்னம் பறந்துவந்தபோது அதனுடைய வெண்சிறகின் பேரொளிபரவச் சோலையின் பசுமை நிறமாறி வெளுத்ததென்றும், அதன் பவளம்போன்ற சிவந்த கால்களின் நிழல்படக் குளங்களும் சிவந்த நீர் உடையன போன்று தோன்றியன வென்றும், அப்பறவையின் வருகையைக் கவி கூறுகின்றார்.

விளக்கம் :—தோன்றிற்று-வந்து தோன்றியது, (பயனிலை.) எது தோன்றிற்று ? புள் - பறவை (எழுவாய்). என்னபுள் ? அன்னப்புள் - அன்னப்பக்ஷி. அன்னப்பக்ஷிகளின் தன்மை என்ன ? வைகும் அன்னப்புள் - வசிக்கின்ற அன்னப்புள். எங்கே வைகும் ? முளரித்தலை - தாமரையில். அந்தத் தாமரைகளின் தன்மை என்ன ? தோன்றும் முளரி - வளர்கின்ற தாமரை. எங்கே ? அப்புஉள் - நீரினுள். நீரிலே விளையும் தாமரையில் வசிப்பதாகிய அன்னப்பறவை எங்கே தோன்றியது ? முன் - முன்னால். யாருக்குமுன் ? நிறத்தான் முன் - மார்பையுடைய நளனுக்கு முன்னால். அவனது மார்பு எப்படிப்பட்டது ? 'மாண்-மாட்சிமைதங்கியது. நளன்முன் அன்னம் தோன்றும்போது என்ன நிகழ்ந்தது ? பெயர - மாறுவதாக. என்ன பெயர ? நிறம் பெயர - நிறம் மாறுவதாகி. எது நிறம்பெயர ? சோலை. எதனால் சோலை நிறம்பெயர ? நிறத்தால். எப்படிப்பட்ட நிறத்தால் ? நீள் நிறத்தால் - ஒளிபொருந்திய நிறத்தால். (எதனுடைய நீள்நிறத்தினால் ? அன்னத்தின் வெண்மையாகிய சிறகினுடைய ஒளிபொருந்திய நிறத்தினால், என்பதை வருவித்துக் கொள்ளவேண்டும்). இன்னும் என்ன நிகழ்ந்தது ? சிவப்ப - சிவந்ததாக. எதுசிவப்ப ? பொய்கைத் தலம் - குளங்கள். எதனால் சிவப்ப ? நிறத்தால் - நிறத்தினால். எதனுடை நிறத்தினால் - தாள் நிறத்தால் - கால்களின் நிறத்தால். எப்படிப்பட்ட தாள் ? நீடியதாள் - நீண்டகால். எதனுடைய நீடியதாள் ? தன் நீடியதாள் - அன்னத்தினுடைய நீண்டதாள்.

விரிவுரை :—அடைமொழிகள் (epithets) இரண்டு விதப்படும். ஒன்று, ஒருபொருளை அதுபோன்ற பிற பொருள்களினின்று பிரித்துக் காட்டச் சிறப்பாக வருவது. மற்றது, கூறிய பொருளின் இயற்கையைப் பொதுவாகக் காட்டுவது. கரியமேகம் என்பதில், வெண்மேகமன்று கருமேகம் என்று சிறப்பாகச் சொல்வதால் கரிய என்பது சிறப்பு அடைமொழி (restrictive epithet). கரியகாகம், என்பதினில், வெண்காகம், பச்சைக் காகம், சிவப்புக் காகம் என வேறுநிறக் காகங்கள் இல்லாததால், இங்குக் கரிய என்பது காகத்தின் இயற்கை நிறம் இன்னதென்பது ஒன்றையே குறிப்பதால், அது இயற்கை அடைமொழி (descriptive epithet). அவ்வாறே, இச்செய்யுளில், அப்புள் தோன்றும் முளரி, முளரித்தலை வைகும் அன்னப்புள், எனும் வாக்கியங்களில் இருக்கும் அடைமொழிகள், முளரி, அன்னம் ஆகிய இவைகள் இயற்கையாக எங்கே முளைக்கும் எங்கே வசிக்கும் என்பதையே காட்டுவதால் அவை இயற்கை அடைமொழிகள்.

குறிப்பு :—1. பெயர, சிவப்ப, என்னும் இரண்டு வினையெச்சங்களும் காரியப் பொருளில் வந்து, தோன்றிற்று. என்னும், வினைமுற்றைக் கொண்டு முடிகின்றன.

2. முளரித்தலை, பொய்கைத்தலம், என்பவைகளில் தலை, தலம், என்பன இடத்தைக் காட்டும். முன் காரிகை யார்கண்ணே, என்பதில், கண் இடத்தைக் காட்டும் உருபாய் வந்ததை நினைத்துக் கொள்க.

3. நிறம் - மார்பு. நீள் - ஒளி. முளரி-தாமரை. மாண்-மாட்சிமை.

13 பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமன்
மேதிக் குலமேறி மென்கரும்பைக்—கோதிக்
கடித்துத்தான் முத்துமிழுங் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா வென்றான் பெயர்ந்து.

பதப்பிரிவு:—பேதை மட அன்னம்தன்னை பிழையாமல் மேதி குலம் ஏறி மென் கரும்பை கோதி கடித்து தான் முத்து உமிழும் கங்கை நீர் நாடன் பிடித்து தா என்றான் பெயர்ந்து.

அன்வயம்:—மேதிக்குலம் ஏறி மென்கரும்பை கோதிக்கடித்து முத்தைத்தான் உமிழும் கங்கைநீர் நாடன், பெயர்ந்து, 'பேதை மட அன்னம்தன்னை பிழையாமல் பிடித்துத் தா' என்றான்.

கருத்து:— 'இந்த அன்னத்தைத் தப்பவிடாமல் பிடித்துத்தாருங்கள்' என்று நளன் தன்னுடன் வந்த மாதர்களைக் கேட்டான்.

பதவுரை.

மேதி - எருமைகளின்
குலம் - கூட்டமானது
ஏறி - (கரையில்) ஏறி
மென் - மிருதுவாகிய
கரும்பை - கரும்பை
கோதி - மென்று
கடித்து - கடித்து
முத்துத்தான் - முத்துக்களையே
உமிழும் - உமிழ்கின்ற
கங்கை - கங்கையாற்றினது
நீர் - நீர்வளம் மிகுந்த
நாடன் - நாட்டையுடைய நளன்,
பெயர்ந்து - (அந்த அன்னம் இறங்கிய
இடத்திற்குப்) போய்,
பேதை - கபடமில்லாத
மட - இளமை பொருந்திய
அன்னம்தன்னை - அன்னத்தை
பிழையாமல் - தப்பவிடாமல்
பிடித்து - பிடித்து
தா - என்னிடத்தில் கொடு,
என்றான் - என்று (மாதர்களைப் பார்த்துக்)
கூறினான்.

விளக்கம்:—என்றான்-என்று கூறினான் (பயனிலை). என்ன என்றான் ? தா என்றான். என்ன செய்து தா என்றான்? பிடித்துத் தா என்றான். என்ன ஆகாமல் பிடித்துத்தா என்றான்? பிழையாமல்-தப்பாமல். எதைப் பிழையாமல் பிடித்துத் தா என்றான் ? அன்னம்தன்னை-வந்திறங்கிய அவ்வன்னத்தை. அவ்வன்னம் எப்படிப்பட்டது ? மட - இளமை பொருந்தியது. இன்னும் எப்படிப்பட்டது ? பேதை-ஒன்றுமறியாத பேதையானது. யார் அன்னத்தைப் பிடித்துத் தா என்றான் ? நாடன் - நாட்டையுடைய நளன் (எழுவாய்). எப்படிப்பட்ட நாடன் ? நீர் நாடன் - நீர்வளம் மிகுந்த நாடன். எதன் நீர்நாடன் - கங்கை நீர் நாடன். அந்த வளம் எப்படிப்பட்டது ? உமிழும்-உமிழும்படியானது. எது உமிழும் ? குலம் - கூட்டம். எதன்குலம் ? மேதிக் குலம் - எருமைக்கூட்டம். மேதிக்குலம் எதை உமிழும் ? முத்துத்தான் - முத்துக்களையே. எருமைக்கூட்டம் என்ன செய்து முத்துக்களையே உமிழும் ? ஏறி - (கரை) ஏறி. [எந்தக்கரை ? அது படிந்திருந்த குளம், குட்டை முதலியவைகளை விட்டுக் கரை ஏறி] மேதிக்குலம் (கரை) ஏறி என்னசெய்து முத்து உமிழும் ? கோதி கடித்து - மென்றும் கடித்து. எதை ? கரும்பை. எப்படிப்பட்ட கரும்பை ? மென் கரும்பை - மிருதுவான கரும்பை. [எங்கிருந்த கரும்பை ? கரையிலிருந்த கரும்பந்தோட்டத்துக் கரும்பை]. நாடன் என்னசெய்து அன்னத்தை பிடித்துத் தா என்றான் ? பெயர்ந்து - போய். [எங்குப்போய் ? அன்னம் இறங்கின இடத்திற்குப்போய்]

விரிவுரை:—மருதநிலத்தில் கூறப்படும் விலங்கு எருமை, பயிர் கரும்பு. எருமையின் மிகுதியும் கரும்பின் செழிப்பையும் சொல்லி அந்நிலத்தின் வளப்பத்தைக் கவி இங்குக் காட்டுகின்றார். அந்த நாட்டுக் கரும்பைக் கடித்தால் எல்லாம் இரஸமாம், சக்கையென்பதே கிடையாதாம். அதனால்தான் எருமைகள் முத்தைத்தான் சக்கைக்குப் பதிலாக உமிழ்கின்றன. இப்பியிலேமாத்திரம் அல்லாமல் முத்துக்கள் யானைத்தந்தம் வாழை, கரும்பு, மூங்கில் முதலியவைகளிலும் பிறக்கும் என்று தமிழ்நூல்கள் கூறும். ஆதலால் முத்துமுதிர்ந்த கரும்புஎன்று இங்குக் கவி கூறினார். கடித்துதான் என்பதிலிருந்ததான் என்பதை எடுத்து முத்து என்பதனோடுகூட்டி முத்துந்தான் என்று நிறுத்தி முத்தையே அதாவது முத்தைத்தவிர வேறொன்றும் எருமை உமிழாது என்று பொருள் கொள்வதே முறை.

குறிப்பு :—குலம் என்ற சொல் கூட்டம் என்ற பொருளில் இங்கு வந்தது. இனி அதற்கே சிறப்பு என்ற பொருளும் உண்டு. குலமணி - என்றால் சிறந்த இரத்தினம். மணிக்குலம் என்றால் இரத்தினங்களின் தொகுதி, அல்லது கூட்டம்.

14. நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே—நீடியநல்
பைங்கூந்தல்வல்லியர்கள் பற்றிக்கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து.

பதப்பிரிவு :—நாடி மட அன்னத்தை நல்ல மயில் குழாம் ஓடிவளைக்கின்றது ஒப்பவே நீடியநல் பைகூந்தல் வல்லியர்கள் பற்றி கொண்டுபோந்து தம் கோவின் முன் வைத்தார் தாழ்ந்து.

அன்வயம் :—நீடிய நல் பைங்கூந்தல் வல்லியர்கள், நல்லமயில் குழாம் ஓடி வளைக்கின்றது ஒப்பவே, மட அன்னத்தை நாடி, பற்றிக்கொண்டு போந்து தம் கோவின்முன் தாழ்ந்து வைத்தார்.

கருத்து :— மாதர்கள் அவ்வாறே அன்னத்தைப் பிடித்து நளனிடத்தில் கொடுத்தனர்.

பதவுரை

நீடிய - நீண்ட
நல் - அழகிய
பை - பசுமையான
கூந்தல் - கூந்தலையுடைய
வல்லியர்கள் - கொடிபோன்ற மாதர்கள்
நல்ல - அழகிய
மயில் - மயில்களின்
குழாம் - கூட்டமானது
ஓடி - ஓடி
வளைக்கின்றது - சூழ்ந்துகொள்வதை
ஒப்பவே - போலவே,
மட - இளமைபொருந்திய
அன்னத்தை - அன்னத்தை
நாடி - அடைந்து
பற்றி - பிடித்து
கொடுபோந்து - கொண்டுபோய்,
தம் - தங்களுடைய
கோவின்முன் - அரசனுக்கு முன்னால்
தாழ்ந்து - வணங்கி
வைத்தார் - வைத்தனர்.

விளக்கம்:— வைத்தார் (பயனிலை.) யார் வைத்தார் ? வல்லியர்கள் - கொடிபோன்ற மாதர்கள். எதை உடைய வல்லியர் ? கூந்தல் உடைய வல்லியர். கூந்தல் எப்படிப்பட்டது ? பை - பசுமையானது. இன்னும் எப்படிப்பட்டது ? நல் - அழகியது. இன்னும் எப்படிப்பட்டது ? நீடிய - நீண்டது. நீண்ட அழகிய பசுமையான கூந்தலை யுடைய கொடிபோன்ற மாதர் எதை வைத்தார்? அன்னத்தை. எப்படிப்பட்ட அன்னத்தை ? மட அன்னத்தை - இளமை பொருந்திய அன்னத்தை. என்ன செய்து வல்லியர் அன்னத்தை வைத்தார் ? நாடி - தேடிச் சேர்ந்து. நாடி என்ன செய்து ? பற்றி-பிடித்து. பிடித்து என்ன செய்து ? கொடு போந்து - கொண்டு போய். வல்லியர் அன்னத்தை நாடியது எப்படி இருந்தது ? ஒப்பவே - ஒத்து இருக்கும்படி. எதை ? வளைக்கின்றது ஒப்

பவே - சூழ்ந்து கொள்வதை ஒத்திருக்கும்படி. என்ன செய்து வளைக்கின்றதை? ஓடி வளைக்கின்றதை. எது ஓடி வளைக்கின்றது ஒப்ப? குழாம் - கூட்டம். எதன் குழாம்? மயில்குழாம் - மயிலின் கூட்டம். எப்படிப்பட்ட மயிற் குழாம்? நல்ல மயிற் குழாம் - அழகிய மயில் கூட்டம். மயில்கள் சேர்ந்து சூழ்ந்து கொள்வதுபோல் மாதர் இந்த அன்னத்தைப் பிடித்துக் கொண்டு போய் எங்கு வைத்தார்? முன் - முன்னால். யாருக்கு முன்னால்? கோவின் முன் - அரசனுக்கு முன். யாருடைய அரசனுக்கு முன்? தம் கோவின் முன் - தங்களுடைய அரசனுக்கு முன்னால். என்ன செய்து வைத்தார்? தாழ்ந்து வைத்தார் - வணங்கி வைத்தார்.

விரிவுரை:— சாயலிலே மாதர்க்கு உவமை மயில்' மயில்கள் சூழ்ந்து பிடிப்பதுபோல் அன்னத்தை மாதர் சூழ்ந்தனர், என்பது உவமைஅணி. மெல்லிய சரீரத்தால் பெண்களைக் கொடி என்றும், கொம்பு (பூத்தசிறுகிளை) என்றும் அழைப்பதுண்டு.வல்லிஎன்றால் பூங்கொடி. ஆதலால் இங்கு அவர்களைக் கொடி போன்றவர் என்று குறிப்பிக்க வல்லியர் என்று கவி கூறுகின்றனர்.

குறிப்பு:— மட அன்னம், என்றபோது மடமை, என்பது இளமையைக் காட்டுகின்றது, இளமைக்கு உரிய தன்மை அறியாமை ஆகையால் மடமை, என்றால் அறிவில்லாத்தனம் என்ற ஒரு பொருளும் உளது. இந்தப் பொருளிலே, 'அவன் மடயன்,' 'இவன் மடயன்' என்று சாதாரணமாய் உபயோகப்படுத்துகின்றோம். மடயன் வேறு, மடையன் வேறு. மடையன் என்றால் சமையற்காரன் என்று அர்த்தம். [மடைப்பள்ளி - சமையல் அறை, என்பது யாவரும் அறிவர்]

15. அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் [கொண்டுபோய்
மன்னன் றிருமுன்னர் வைத்தலுமே - அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.

பதப்பிரிவு:— அன்னம்தனை பிடித்து அங்கு ஆய் இழையார் கொண்டு போய் மன்னன் திருமுன்னர் வைத்தலும்ஏ அன்னம் மலங்கிற்றுஏ தன்னுடைய வான் கிளையை தேடி கலங்கிற்றுஏ மன்னவனை கண்டு.

கருத்து:— அப்பொழுது அன்னம் மிகவும் கலங்கிப் பயந்தது.

பதவுரை.

அங்கு - அவ்விடத்தில்
ஆய் - ஆராய்ந்தெடுத்த
இழையார் - ஆபரணங்களை அணிந்த மாதர்,
அன்னம் தனை - அன்னத்தை
பிடித்து - பிடித்து
கொண்டுபோய் - கொண்டுபோய்
மன்னன் - அரசனுடைய
திருமுன்னர் - அழகிய முன்னிலையில்
வைத்தலுமே - வைத்த உடனே,
அன்னம் - அந்த அன்னப் பறவை
தன் - தன்னுடைய
வான் - சிறந்த
கிளையை - சுற்றமாகிய பறவைகளை
தேடி - (துணைசெய்ய வருமோ என) தேடி
மலங்கிற்று - வருந்தியது.
மன்னவனை - அரசனை
கண்டு - பார்த்து
கலங்கிற்று - (என்ன செய்வானோ வென்று) கலங்கியது.

விளக்கம்:—இது எளிய செய்யுளாதலால் அன்வயமும் விளக்கமும் இங்கு எழுதவில்லை.

விரிவுரை :—பிடிபட்ட அன்னம் கலக்கம் கொண்டதென்று சொல்வதோடு புகழேந்திப்புலவர் நிறுத்திவிடுகின்றார். ஆனால் இந்த நளனுடைய சரித்திரத்தையே அதிவீரராமபாண்டியன் எழுதியுள்ள நைடதம் என்னும் நூலில் அன்னத்தைப் பிடிக்கின்ற இப்பாகம் வெகு விரிவாகவும் அழகாகவும் எழுதப்பட்டிருக்கின்றது. அங்கே, தன்சிறகில் பிரகாசிக்கின்ற பொன்னிற்கு ஆசைப்பட்டுத் தன்னைக்கொன்று அப்பொன்னை எடுத்துக்கொள்ளத் தான் பிடித்தான் என்று அந்த அசட்டு அன்னம் எண்ணி, அரசனுக்குத் தன்பால் இரக்கம் உண்டாகும்படி சில வார்த்தைகள் சொல்கின்றது.

கம்ப ராமாயணம்

பால காண்டம்

2. நாட்டுப் படலம்.

T. N. சேஷாசலம் B. A. B. L. (68-வது பக்கத் தொடர்ச்சி)

கும்பி டற்கோரு கோயில் தேடிலர்.

கோசல தேசத்துக் குலமள்ளர் வித்தும் இடாது தம் நிலத்தை விளையவைத்த விந்தையது இருந்த வண்ணம் முன் கண்டோம். கவிக்கரசு கம்பநாட்டாழ்வார் அயற்கவிகள் வகுத்த முறையை விடுத்துத் திருக்குறளின் தத்துவத்தைத் தழுவியதால் எழுந்தபயன் அதுவாகும். இனி, வள்ளுவரையும் ஒரு சிறிது பின்பட விட்டுவிட்டு நம்கவி தன் கருத்தை விஞ்சவைக்கின்ற பெருமையும் இங்குக்காண்போம்.

தற்காலம் நமது பார்வையுள் அடங்கியிருக்கின்ற இந்நாட்டுப் படலத்தில் வரும் பல செய்யுள்களால் கோசல மக்களது இல்வாழ்க்கை இருந்தவிதம் விளங்குகின்றது. மனத்தினால் வாக்கினால் மற்று யாக்கையால் அவர் செய்வன யாவையும் தூயவே என்பதற்கையமில்லை. செவிவழிச் சுருதிநூலும் இன்னிசைப்பயனும் மாந்தி மனமகிழ்வர். 'நாமுதற்படுவமெய்யும் நாமநூல்பொருளும்' என்றபடி, பேசுவன யாவும் வாய்மையும் உயரிய நூல்களின் பொருளுமல்லாது பொய்யும் பயனில சொற்களும் பாராட்டி அவர் திரிந்திலர்.

[நாமுதல்படுவமெய்யும் நாமநூல் பொருளும்,என்னும் இவ்வடியில் (நாட்டுப்படலம் 5-வது செய்யுள்) அடங்கியுள்ள நயம் கருதத் தக்கது. அத்தேயத்து மாந்தர்களுக்கு நாவினது நுனியிலேயே மெய்யானது எப்பொழுதும் தங்கியிருந்தது என்று சிறப்பித்துக் கவிகாட்டுகின்றனர். உயர்ந்த நூல்களின் பொருளும் அவ்வாறே அவர்களது நாவின் நுனியில் இருந்தனவாம். சாதாரணமாய்ப்பொய்வார்த்தையும் வீண்வம்பும் வெகுஎளிது. அவைகளே நாக்கின் நுனியில் 'வந்தேன் வந்தேன்' என்று காத்துக்கொண்டிருக்கும். மெய்யும் மேலான

விஷயங்களும் பேசவேண்டுமென்றால் நாநுனியில் துடித்திருக்கும் பொய்யையும் வம்பையும் முயற்சிசெய்து விலக்கி அப்புறம் பிரயத்தனத்தின் பலனாய் மெய்யும் நூற்பொருளும் வரவேண்டி இருப்பது இக்காலத்தில் அநுபவ பூர்வமாய் யாவரும் அறிந்ததே. கம்பர்கண்ட கோசலத்தவர்களுக்கு மெய்யும் பொருளுரையும் முயற்சியின் காரியங்களல்ல. அவைதாம் அவர்களுக்கு இயற்கை என்று தெரிகின்றது]

காயத்தால் அவர்செய்கின்ற கருமங்கள் இருதிறப்பட்ட ஒரேவகையினுள் அடங்கும். "வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்தும் அன்றி விளைவன யாவையே?" என்றனர் கம்பர். வறியவர்களது துன்பத்தைக்களைவதும் விருந்தினர் முகங்கண்டு அன்னவிழா நடத்திவைக்க ஆயத்தமாவது மல்லாமல் அவர்கள் செய்வதற்கு வேறொன்றுமங்கு இருந்ததில்லை.

[இவ்விதம், விருந்தோம்பலும் வறியவர்க் கீதலும் இடையூறின்றிக் கோசலத்தில் நடைபெறுவதற்கு ஆதாரமாயிருக்கின்ற தன்மை யாதெனக் கம்பர் வெகு அழகாய் அநுபவத்திற் கிசைந்து கூறுகின்றார்:—

" பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே.

(இதன்பொருள்:—பெரிய விசாலமான கண்களையும் பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றியையும் உடைய மாதர்கள் அனைவர்க்கும் செல்வமும் கல்வியும் தங்கியிருந்த தென்றால், பிறகு வருந்தி வந்தவர்களுக்கு அவர்கள் கேளா முன்னமே குறிப்பறிந்து குறைகளைத் தீர்ப்பதும் விருந்தினர் மகிழ வரவேற்பதும் தவிர வேறு என்ன அங்கு நிகழக்கூடும்.) மனைவியர் மாறுபட்டமனத்தினராயின் விருந்தினர்பாடு திண்டாட்டமாகிப் புருஷன் மனமும் புழுங்கவேண்டி நேர்வது திண்ணம். கண்ணிரண்டும் ஒன்றையே நோக்கினாலன்றிப் பொருள் புலப்படாததுபோல் மனைவியும் கணவனும் ஒரு மனப்படாராயின் இல்வாழ்க்கைப் பயனற்றதாகும். கிரகசித்திரத்தில் புருஷன் தன்னோடு அழைத்துவந்த விருந்தினர்க்கு இல்லக்கிழத்தி என்ன முகம் கொடுப்பாளோ என்னும் பயம் பலமனைகளில் பிரதானமாயிருக்கின்றது. வந்த விருந்தைப் பாராட்ட வேண்டும் என்னும் ஆசையும், கேட்டவர்களுக்கு ஒன்றுகொடுக்க வேண்டும் என்னும் எண்ணமும் ஆடவர்க்கு இருக்கின்ற காலத்திலும் அகமுடையாள் சித்தம் அதற்கு மாறாகி, அவன் ஆசையும் எண்ணமும் வீணாவதுடன், இவனும் அவள் பொருட்டு ஒவ்வொரு வேளை விருந்தினர்க்கு முகமும் வறியவர்க்கு உதவியும் கொடுக்காமல் போகின்றான். எல்லாம், 'அம்மாளைக் கேட்கவேண்டும்' என்று பாவம் அவன் பாடு முடிகின்றது. இந்தப் பரிதாபநிலையை எந்தக் காலத்திலேயும் எந்தத் தேசத்திலேயும் காணலாம். போரிற் புகுந்த வீரன் தான் வெல்லுவது நிச்சயமென்றும் தோல்வியுற்றால் தானடையும் தாழ்வு இத்தகையது என்றும் சூளுரைத்துக் கூறுவதாகத் திருத்தக்கத்தேவர்,

'இல்லாளை யஞ்சி விருந்தின் முகங்கொன்ற நெஞ்சிற்
புல்லாள ளாக மறந்தோற்பின்........."

என்று சிந்தாமணியில் (மண்மகளிலம்பகம், 218. செய்யுள்) பாடுகின்றார். (இப்போரில் நான் தோற்பேனாயின், மனைவிக்குப் பயந்து விருந்தினர் முகங்குழையுமாறு நடந்துகொண்ட அற்பனுக்குச் சமானமாக ஆகக்கடவேன்). அக்கால ஏமாங்கத நாடுமுதல் இக்காலம் நமதனுபவத்தில் அடங்கிய நாடுகளிலெல்லாம் இந்தச் செய்தி எங்குமிருக்கக் கோசலம் மாத்திரம் இப்பழிக்குப் பாத்திரமில்லாதது ஏனெனில் மாதருக்கெல்லாம் கல்வி பூத்திருந்ததால். பெண்கல்வி யென்பதைக் கம்பர் 'மூக்குக்கண்ணாடி' என்னும் உலகறிந்த பொருளில் கொள்ளவில்லை. மெய்க்கல்வியை நினைத்து இவ்வாசகம் இயம்புகின்றார். அக்கல்வி எய்தியவர் யாரும் அருளும் அன்பும் உடையாராய் விளங்கி யாவர்க்கும் குறையிலாது கொடுப்பவராவர். மாதரும் அத்தகையர் என்றபின் விருந்தினர் தம் முகத்தையும், வறியவர் தம் வாயையும் இழந்தகல எந்நாளும் கோசலத்தில் நிகழாது].

இதுகாறும் இடைப்பிறவரல். ஆதலால், 'வருந்திவந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்துமன்றி விளைவன யாவையே.' என்று கம்பர் பிறசெயல்களைத் தன் நாட்டு இல்வாழ்க்கையினின்று விலக்கிவிட்டனர். ஆனால், திருவள்ளுவரோ தன் குறளில் 'இல்வாழ்க்கை' என்னும் அதிகாரத்தில் குடிமக்களின் கடமையைக் கூறுபவராய்த்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லொன்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை"

என விதித்திருப்பதைக் கம்பர் மறந்தாரோ. (பிதிரர் தேவர் விருந்தினர் சுற்றத்தார் தான், என்னும் ஐவரையும் நெறிபிறழாமல் ஆராதிப்பதே தலையான இல்வாழ்க்கை, என்பது இக்குறளின் பொருள்) பிதுருக்களுக்குச் செய்யவேண்டிய கடன்களைச் செய்தனர் என்று கம்பர் எங்கும் இந்நாட்டில் கூறவில்லை. 'சாறும் வேள்வியும் தலைமயங்குமே', என்னும் ஓர் அடியில் திருவிழாவைப்பற்றி ஏதோ ஒருசிறிது பாராமுகமாய்க் குறிக்கப்பட்டுள்ளது தவிரக் கோசலமக்கள் தெய்வ ஆராதனையும் கோவில்வழிபாடும் முக்கியமாகக் கொண்டதாகவும் எண்ணுவதரிது. இதற்கு மாறாகத் திருவள்ளுவர் செப்பிய ஐயவரின் முதலிருவரை விடுத்துக் கம்பர், 'தந்தம் இல் இருந்து தாமும் விருந்தொடும் தமரினோடும், அந்தணர் அமுத உண்டி அயில்வுறும் அமலைத்து எங்கும்' என்னும் அடியில் மற்ற மூவரையுமே காட்டுகின்றார். நெஞ்சால் நினைத்து இவ்வாறு பிதிராராதனையும் தெய்வ ஆராதனையையும் விலக்கக் கம்பரும் நாஸ்திகரோ, அல்லது அந்நாடும் நாஸ்திக நாடேயோ! இரண்டு மன்று. முன் இவர் விதைவிதைத்தாகக் கூறாத காரணத்தால் ஒரு தத்துவம் காணுதற்கு இயன்றதே யொழிய உண்மையிலேயே வித்திடா நிலம் விளைந்ததென்று எண்ணலாமோ? அன்னவாறே இவ்விடத்திலும் அவர் தெய்வ ஆராதனையை இகழ்ந்தன ரென்றேனும் தென்புலத்தவர்பால் அன்பற்றவரென்றேனும் எண்ணின் பிழையாம். பிதுருக்களும் தெய்வங்களும் கண் காணாதவர். அவரை ஆராதிப்பதும் வேண்டு பெ[illegible]னினும் கண்கண்டதெய்வங்களாய் உடன் வாழும் மக்களுக்குத் தொண்டு செய்தல் முதல் தருமம் என்னுமொரு பெரும் வாழ்க்கைத்தத்துவம் வெளிப்படும் பொருட்டு வள்ளுவரின் வழிவிலகிக் கம்பரும் இன்னவாறு நடந்து சென்றார். ஆலயங்கள் படமாடும் கோயில்கள் அவ்வாலயத்தில் குடிகொண்ட கோவே நடமாடும் கோயிலெனச் சீவகோடிகளாய்த் தோன்றுவதால் எவ்வுயிர்க்கும் அன்போடு ஆராதனை புரிவதொன்றே அக்கடவுள் உவந்தேற்கும் வழிபாடு என்னுமிதை மறப்பரோ கலைமுதிர்ந்த சிந்தைபெறு கம்பனெனும்கவிக்கரசு! காலமும் தேசமும் கவிமனதைக் கட்டிவைக்கா. ஆங்கிலத்திலே கோல்ரிட்ஜ் (Coleridge) என்னும் மெய்ப்புலவரும்,

" He prayeth best who loveth best
Both man and bird and beast"

என்று தனதியற்கையாய உள்ளன்பைச் சொற்களாக உருக்கிவார்த்த வாக்கியத்தை உன்னுந்தோறும் உன்னுந்தோறும் நம் நெஞ்சிளக இக்கருத்தே நாட்டி வைத்தார். இவையனைய கவிக்கனியை நண்பர்காள், கலந்துண்போம். நீயென்றும் நானென்றும் பலபேசிக் காயெல்லாம் கவர்ந்துண்போர் உண்டகல்க!

காந்திமதி என்னும்

காந்தாரநாட்டுக் கட்டழகி.

T. N. சேஷாசலம். B. A. B. L.

(64-வது பக்கத் தொடர்ச்சி)

4. காற்றாடி விட்ட கருணாகரர்.

காந்திமதிக்கு அவ்விரவு கலக்கமற்ற நித்திரை புகுந்ததில்லை யாகையால் வீதியி லவளது பலகணிக்கருகில் பலர் குழுமிய அரவம் கேட்டுப் பெரும்பயம் கொண்டனள். அது என்னவென்று கதவைத்திறந்துபார்க்க அவள் துணியவில்லை. எனினும் 'அவுணனாவேன்' என்றொருவன் அன்றுமாலை கூறிப்போன வஞ்சினம் அவள் நினைவிற்குவர தெருவில் நடைபெற்ற குழப்பத்திற்கு இலக்குத்தானே யென்பதுணர்ந்தாள். உடனே எழுந்து தன்னறையகன்று தந்தையிடம் இதைத்தெரிவிக்க எண்ணினாள். ஆனால் இவ்வாறு செய்வது கருணாகரரை வெளிநின்றவர்களுடன் போருக்குத் தூண்டுவதுபோலாகும் என்பதும், அப்போரில் தன் தந்தை வற்பதற்கான ஆபத்தின் அளவும் அறிந்து அவ்வெண்ணத்தையும் ஒழித்தாள். செய்யும்வகை யாதென்பது அறியாது பொறிபட்ட மான்போல் திகைப்பாள். கலாநாதன் கயவர்களை உரப்பிய குரல் காதிற்கு எட்டியது. இனிப் பயமில்லை என்று ஒருவாறு கவலைநீங்கினாள். எதிர்ப்பவர் பலர்க்கெதிரே கலாநாதன் ஒருவனேயாயினும் அவன் அபஜயம் அடைவனோ என்னும் சந்தேகமெதுவும் அவள் மனதில் தெளிவாய்த் தோன்றவில்லையெனினும் ஊரார் அவன் உதவிக்குக் கூடியதுணர்ந்தபின்தான் பாரம் நீங்கியவள்போல் அவள் பெருமூச்செறிந்தாள். பிறகு கலகம் முடிந்ததென்று அறிந்தாளேயொழிய மற்றெதுவும் அவள் ஊகிக்கமுடியவில்லை. கலாநாதனுடன் கருணாகரர் அவளது அறைக்குள் புகுந்தபோது அவள் ஆலயம் இருந்த திசையைநோக்கிக் கண்மூடிக் கும்பிட்டிருந்தாள். இதுகண்டு கருணாகரர், "பெண்ணே, காந்தி, மானிடர் செய்ந்நன்றி மறவாது கைம்மாறளித்தலே கடவுளர்க்குச் செய்வதான சிறந்த பூஜையாகும். உன்னுடலையும் அதனுயிர்நிலையாம் மானத்தையும் இன்று காத்த இச்செம்மலை இனிதேற்று என் மருகனாக்கிக் களிக்கச் செய்வாய்," என்றனர். அவ்வளவில் காந்தியும் கலாநாதன் இருந்த முகம்திரும்பி, "வாய்மையொடு வீரம் வாய்ந்த கலாநாத, இழிவுரைபகர்ந்[illegible] என்னையும் காத்தற்கிசைந்த பெருந்தகையுடையீர், நும் குணத்தை மகிழ்ந்தேனெனினும் இக் கைவண்ணத்தைக் காண என் கண்கள் கூசுகின்றன. ஆதலால், இத்தருணம் என்னைவிட் டகல்வீராயின் பொழுதுவிடிந்ததும் வந்தன முமக்கு மனமாரச் செலுத்துகின்றேன்." என இயம்பி அங்கிருந்ததோர் ஆசனத்திலமர்ந்து விட்டாள். கருணாகரர் சினத்துடன் கைவிதிர்த்து வெளியேகி விட்டனர். அன்புடன் துவக்கிய அவள்மொழி வெறுப்பிடம் வழுவுமென்று எதிர்பாராத கலாநாதன் கலங்கித் திகைத்தான். "காந்திமதி, காந்திமதி" என இருதரம் மிருதுவாய்அழைத்தான். அவள்முகம் இளகவில்லை. அவளுக்கு முன் சென்று சற்று நின்றான். "எனக்கு முகங் கொடாயோ, என்னைக் கண்ணெடுத்துப்பாராயோ......என்கை வண்ணத்தைக் காண நீ சகியாயேல் அது இருந்தென் செய்வது......இதோ வெட்டி எறிகின்றேன்" என்று தன் உடைவாளைத் தேடினான். கலாநாதன் அவ்வாறு செய்யத்தான் நிச்சயித்தானோ அல்லது காந்தியைச் சோதிக்கவேயோ எதுவா யிருப்பினும் கருணாகரர் சடுதியில் வந்து தடுத்து விட்டார். "என்ன கலாநாதா, உன் கையையே இன்று காந்திக்குக் கையுறையாகக் கொடுக்கக் கருதினாய் போலும்......" என்று சொல்லிய கருணாகரரைக் காந்தி மறுத்து, "அன்று, அன்று, இன்றைக்கெல்லா மிவர் கைகுறைப்பதே கருமமாய்க் கொண்டுளார்.....இராவொன்றிற்கு ஒருகை வீதம் வெட்டினால் அமையுமே!" என்று சொல்லிச் சிறு நகையும் புரிந்தாள். கலாநாதன் ஏதோ பேச வாயெடுத்தான், ஆனால் கருணாகரர், "வேண்டாம், காந்தி சிறிது கரைந்திருக்க நீ எதையேனும் சொல்லி உறைத்துவிடாதே. வந்துவிடு. சொல்வதற்கானதெல்லாம் செவ்வனே கவனம் செய்து வைத்துக்கொண்டு காலையில் வந்து ஒருங்கே ஓதுவதுதான் நலம்." என்று அவனை விலக்கித் தன்னுடன் அழைத்துக் கொண்டுபோய் அவ்வறைக்குப் பக்கத்தறையில் அமர்ந்தார்.

இருவரும் சிறிதுகாலம் சும்மாவிருந்தனர். "யான் போகின்றேன், இனி இங்கிருப்பதில் பயனில்லை. வாய்மையும் வீரமும் வாய்ந்த கலாநாதன் அவளுக்கு ஆவேனேயன்றி அவள்காதற்குரிய கலாநாதன்ஒருநாளும் ஆகேன்," என்று எண்ணி வாட்ட முற்றனன் கலாநாதன். முகக்குறியால் இஃதுணர்ந்த கருணாகரர், "அப்பா, மனம் தளராதே" என்று ஆற்றினார். அவன் ஆறுதல் பெறவில்லை. அவ்வீட்டைவிட் டகன்றுவிடத் தீர்மானித் தெழுந்தான். கருணாகரர் அவனை நிறுத்திக் "கலாநாதா காலைவரையில் இரு. அவசரப்படாதே. அசடே, ஏன் தவிக்கின்றாய். இவ்விரவு நீ அவள் பொருட்டுப் புரிந்துள சாகசத்தைக்கண்டும் உன்னை ஏற்காதிருப்பாளாயின் இவ்வூர் முழுவதும் அவளைச் சீ சீ எனப்பழிக்கும். என் மகளோ பழிக்கஞ்சுபவள். நானோ நும்மிருவரையும் நூலிழைபோல் நெருடிவிடுவதென்று விரதம் கொண்டுளேன். தந்தையும் தமரும் உன்சார்பிருக்க........" என்று சொல்லி வருகையிலவன், "என்ன மதியீனம்! வண்ணந்தனைக் காணவும் சகியா இக்கையைப் பரிவுடன் பற்றவும் நேர்வளோ! ஐய, என்னை மனப்பால்கடலில் முழுகச்செய்யாதீர்!" என்று சொல்லிப் போகக்கருதிக் கலாநாதன் மீண்டும் முயன்றான்.

"அட, காலைப்போது பார்த்துக்கொள். நான் தந்தை என்பதையும் அச்சிறுமி மறப்பளோ. நாதா, உன் வாயில் இருக்கின்றது வழி." என்றார் கருணாகரர்.

"என்செய்வேன். உமது மகளிடம் மென்மொழி இழைத்து அவள் காதலைக் கவர்வதென்றால் எனக்கென்னவோ கோயிலைக் கொள்ளையடிப்பது போலிருக்கின்றது. எனக்கு வாயுமில்லை வழியுமில்லை. விடை கொடுங்கள், போகின்றேன்."

கலாநாதனை இருக்க வைக்கக் கருணாகரர் ஒரு உபாயம் செய்தவராய், "அப்பா,உனக்காக அல்லாமற் போனாலும் காந்திமதிக்காகவாவது நீ யிருக்கவேண்டும். இதற்கும் காலைக்கும் இடையில் இன்னும் எத்தனைபேர் ஏணி ஏறுவார்களோ! உன் இரதியைத் தேடிவந்த மன்மதன் ஒருவன் கையை இழந்து மீண்டான். வேறு யாராவது பின்னும் துணிந்தால் அவன் காலைப் பார்த்து முறிக்க

நீ வேண்டாமா! அப்பொழுதுதானே கொம்புத்தேனிற்கு ஆசை கொள்ளாமலிருப்பான்," என்று எடுத்துக் காட்டி, மறுவார்த்தை சொல்வதற்கு முன் அவனைத் தனியே விட்டுப் போயும்விட்டார்.

கலாநாதன் அங்கிருந்ததோர் அமளியிற் சாய்ந்து ஆசையெனும் காற்றசைப்ப ஊசலாடும் உள்ளம் களைத்துச் சிறிது நேரத்தில் கண்ணயர்ந்தான். இன்னல் தன்மையனான காதலனுக்கிரங்காக் காந்திமதியின் குரூரத்தைக் கடிவதுபோல் கீழ்வானம் சிவந்தது. கதிரவன் கிரணம் இரண்டொன்றுபட அம்மங்கையின் பங்கையக் கண்கள் மலர்ந்தன. எழுந்தனள். சென்ற இரவு நிகழ்ந்த செய்திகளையெல்லாம் நினைத்தாள். மேற்செய்வதென்னவென்று சிந்தித்தாள். கம்மியன்பால் காதல் கொண்டுளள்என்று இதுவரையில் நடந்தவைகளால்நாம் ஊகிப்பதற்கு ஆகாதெனினும் அவன் தன்னிடம் வைத்த அன்பைக் கருதி பெருமை கொண்டனள். அவனிருக்கும் இடம்தேடிச் சென்றுதான் முன்னிரவு வாக்களித்த வந்தனத்தைச் செலுத்த வெண்ணித் தன்னறை தாண்டி இரண்டடி வைத்ததும் கலாநாதன் அமளியில்படுத்திருக்கக் கண்டனள். அன்று இரதிதினம் என்பதும் அவள் நினைவிற்குவந்தது. இருப்பினும் என், எனத்தேறியருகு செல்ல அவன் உறங்கக்கண்டு சிறிது தயங்கினாள். "துயிலெழுப்புவதெங்ஙனம—தனிமையாயுமிருக்கின்றோம் ... ஆயினும் என்ன. உடன் பிறந்தாள்போல் நானே யவனைத் தொட்டெழுப்புகின்றேன்" — எனத்துணிந்து, குன்றெனக் குவிந்த அக்கம்மியன் தோள்களை மெள்ளத் தட்டிக் குலுக்கினாள். அத்தோள்களின் உரமும் திரளும் இந்நாள் வரையில் ஸ்பரிசபூர்வமாய் அவள் உணர்ந்திராளாதலால் புதியதோர் உவகையால் அவளுடலெங்கும் புளகம் பூத்தது. தண்டாயுதமும் மழுவுமே தழுவிப் பழகிய நம் கலாநாதனது தோள்களும் மெல்லிய மாதர் விரல்நடந்தறியாவாதலால் அவன் மின்சாரம் தீண்டியதெனத் திடுக்கிட்டுக் கண்விழிக்க எதிர் நின்ற மின்னற்கொடியின் பஞ்சினும் நொய்ய கரங்களைத் தன்னிருகைகளாலும் பிடித்தெழுந்தான். "கலாநாதரே, குறித்த வந்தனத்தை யானுமக்குச் செலுத்தியகலவே வந்தேன். மற்றென் கைப்பற்றித் தாழ்த்தல் தகுமோ. தனியிடத்தில் பல பேச வெனக்கு இயலவில்லை. என் தந்தை அருகிருந்தால் இவ்வண்ணம் செய்யப்புகுந்திருப்பீரோ!" என்று காந்தி கோபமின்றி நாணம் தலைகொண்டியம்பினாள். இயம்பிய அளவில் அவ்வறையின் கதவுதிறந்தது. "நானில்லாத குறைவேண்டாம்—கலாநாதா, விடாதே. இரும்பு பழுத்திருக்கும்போதே எடுத்து வளைத்துக் கொள்," என்று கருணாகரர் சொல்லிவிட்டுக் கதவை மூடிக்கொண்டு மறைந்தார்.

ஆசையொருபால் காந்தியின் தாதை யொருபால் உந்தக் கலாநாதன் சுயமாவிருப்பானோ. மனதிற்கினியாளை வாரியெடுத்து ஒரு முத்தம் கொடுக்க எத்தனிக்கையில் அப்பெண் விலகிச்சென்று 'என்னினைத்தேன் என்செய்தேன்' என்றேங்கித் தாமரையைத் தாமரையுடன் சேர்த்தாப்போல் முகத்தைக் கையிடை புதைத்துக் கண்ணின்றும் முத்துருள நின்றாள். கைக்கெட்டியது வாய்க்கெட்டாது அலமந்த கலாநாதன்முன் கருணாகரரும் மறுபடிவந்து இடி இடி எனச் சிரித்தார். சிரித்துப் பெண்ணே, "அழேல், நீ தனித்துவந்ததும் பிழையன்று, இவ்விளவல் நின்னைக் கையாண்டவிதமும் பிழையன்று. இவ்விரண்டினும் இனியதோர்காட்சி என் கண்கள் இதுவரையிற் கண்டதில்லை. காந்தி, ஏதோ தலைநிமிர்ந்து சிறிது சிரி, பார்ப்போம். என்ன, காந்தி, நீ யென்ன மதுரைவீரன் மைபூசியிருக்கின்றாயா. நீ யெழுந்திங்கே வந்தது எனக்குத் தெரியாதா? இந்தத் தூங்குமூஞ்சிக் கும்பகரணனிடமிருந்து உன்னைக்காப்பாற்ற நானிங்கு வரவில்லை. எனதருமந்த புதல்வி தன் தந்தைக்கிணங்கிக் காதலனைக்கொள்ளக் காணத்தான் வந்தேன் ....என் செல்வமே, என்ன, இன்னுமா அழுகின்றாய்," என்று கருணாகரர் அவள் கூந்தலை மெள்ளவருடித் தலையை நிமிர்த்தினார். காந்திமதியோ விம்மி விம்மி யழுதவளாய்த் தந்தையின் கரங்களைப் பரிவுடன்பற்றி, "என் ஆருயிர்த்தந்தாய், மானம் போற்றிய இப்பெருமகற்கு நேற்றிரவு புகன்றபடி யென்னன்றியைத் தெரிவித்துப் போகத்தான் வந்தேன். மற்றெவ்விதச் சூழ்ச்சியோடும் இவ்விடம் அணுகினேனென்றெண்ணாதீர். ஐய, அவரும் அன்னவாறு எண்ண இடம் கொடுக்காதீர். இரதிதினமாயினும் யான் மணம் கருதியவளல்லள். அவர் தாமுயன்ற முத்தத்தையும் நான் காணிக்கையாக எதிர்பார்க்கவும் இல்லை," என்று சாற்றிப் பின்னும் விம்மினள். கருணாகரரும், "பெண்ணே, போதும். இனி நீகாரணமறியாமலே அழுகின்றனை. எங்களுக்குத்தெரியும் இதற்கெல்லாம் அர்த்தம். சுயவரம் ஆய்விட்டது, அவ்வளவுதான். மற்று நீபோய் சிற்றுணவிற்கு ஏற்றன சமைத்துவை. யாம் வாய்பூசி வருகின்றோம்,........இக்காட்சியைக் கண்டு என்னுடன் அகமகிழ உன்தாயில்லாமற் போயினளே," எனக் கூறி அவளை விடுத்தனர்.

காந்தியும் பையப்பைய நடந்து சென்றாள். கலாநாதனது மனதிலோ பகலிழந்த வையமென ஓர் அந்தகாரம் பரந்தது. நன்றியைப்பாராட்டி வந்தனளே யொழியத் தன்னைச் சந்தித்ததில் காதலிற்கிடமில்லை யென்றவள் கூசாது மொழிந்தது மருமத்தில்பட்ட புண்ணில் வடித்தவேல் ஆயிரம் நுழைந்ததுபோன்றிருந்தது. கருணாகரர் அவனிடம் வந்து தோள்களைப் பிடித்துக் குலுக்கி, "அன்றிலெனத் துள்ளிக் குதிக்க வேண்டிய நீ இப்பொழுது ஆந்தையென முகம் தொங்கி துவள்வதற்கு ஏது காரணமடா, மகனே!" என வினவினர்.

"என்செய்வேன் என்னப்பா, எனக்கோ மனைவியாகாளென்பது அவள் முகக்கண்ணாடி காட்டி விடுகின்றது!"

"அந்தக் கண்ணாடி யெனக்கும் பார்க்கத் தெரியும். அப்படியொன்று மவள் முகத்தில் காணவில்லை. நீயென்ன கண்டாய். அடெ, அடெ, நீ ராஜா மாதிரி படுத்து நியாயாதிபதி மாதிரித் தூங்குகின்றாய், இரவு கழியக் காத்திருந்த என்பெண் இரதிதினத்தன்று முதல் முதல் நின்முகத்தில் விழிக்க வேண்டுமென்று உன்னைத் தொட்டும் எழுப்புகின்றாள்........."

"ஆயினுமென். முகம் வெளுத்துக் கண்கலங்கி நின்றாள். காந்திமதியைக் கண்டவர் காதற்குறி யென்று கருதார்."

"அடெயடே, நாதா விட்டுத்தானடா இழுக்க வேண்டும். ஒருநாளில் எல்லாம் கூடிவிடுமா! இன்றைக்குத் தானே யிவ்வளவாயினும் எட்டினாள். நீ பிள்ளைப்பருவத்தில் காற்றாடிவிட்டு விளையாடியதில்லையோ! காற்றாடி குத்தும் போது இழுத்துப் பிடித்தால் பாசம் அறுந்து போம். குத்தும் போதுதான் நூலைப் பரபர வென்று விட்டுவிட வேண்டும். பிறகு நிலைக்கு வந்ததும் இழுத்துக்கொள்ளலாம். காற்று காற்றாடியை ஆட்டி வைப்பது போல் மாதரும் மருட்சியிலுழன்று ஆடுபவர். ஆகையால் காற்றாடியும் பெண்டாட்டியு மொருவகைப் பொருள்கள். விலகியோடும்போது போகவிடு; நிற்கும் போது இழுத்துக்கொள்." என்று கருணாகரர் தனக்குஆன வயதையெல்லாம் மறந்து காற்றாடி பறக்கவிடும் அபிநயம் கையில் காட்டிக் கொண்டே கலாநாதனை அழைத்துக் கொண்டு போஜன மனையைச்சேர்ந்தார். வயதும் ஆகி மனதில் கவலையும் களிப்பும் கூடுமாயின் அவர்களது வாய் வரும் உவமையின் பொருத்தத்தைச் சரிவர எடுத்துக் காட்டுவது துர்லபம். கலாநாதன் அந்த ஆராய்ச்சியில் புகவில்லை. கருணாகரர் காற்றாடிவிடும் செய்கை கூட அவனிருந்த மனநிலையில் விபரீதமாகப் பட்டிலது.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L. (முன் தொடர்ச்சி—பக்கம் 74)

அணியும் சுவையும்.

சுவையாராய்ச்சியில் தொல்காப்பியனாருக்கும் வட நூலாருக்கும் உள்ள வேற்றுமையைக் கண்டோம். அணிநூலார்களுக்குள் காணக்கிடக்கும் கொள்கை வேறுபாடுகளை இஃதொன்றே நன்கு விளக்குகின்றது. சுவைகளை எண்ணி அறிவதோடு அணி ஆராய்ச்சி முடிய வில்லை என்பது தொல்காப்பியனாரது கொள்கை. அப்படியானால் இன்னும் எவ்வளவு தூரந்தான் போவதென்று நாம் அறியவேண்டாமா? வீட்டினை அழகாகக் கட்டிப் பின் இடித்துத் தள்ளுவதுபோலச் சுவையாராய்ச்சி என்று தொடங்கிச் சுவையின் வகையினை வளர்த்திக் கூறிய பின்னர்ச் சுவையை எண்ணுவதால் பயன் ஏதும் இல்லை என்றால் பின் என்ன செய்வது. சுவையாராய்ச்சியால் பயனொன்றும் இல்லையா? சுவையாராய்ச்சி என்பது சுவையைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் எண்ணுவதினும் வேறா? அஃதே உண்மை. சுவையாராய்ச்சிதான் பாட்டின் ஆராய்ச்சி. அவ்வாராய்ச்சிதான் யாது என்பதனை Benedetto Croce என்ற இத்தாலிய அறிஞர் கண்டறிந்த கொள்கையின்படி ஒரு சிறிது இங்குக் கூறுவோம். இதனது அகலத்தினை விரிந்து கிடக்கும் அவரது நூல்கள் பலவற்றினும் கண்டுகொள்க.

அணிநூல்.

பாட்டின் உயிர்நிலையாக உள்ளமைந்து ஒளிர்வது தான் என்ன? இதற்குப் பலவகையான விடைகளைப் பலரும் அளித்துப் போகின்றனர். அணிகள் நிரம்பிய நூல்களையும் அணிகளைப்பற்றி ஆராயும் நூல்களையும் ஒற்றுமை நயம் பற்றி அணிநூல் என்றே இங்கு வழங்குவோமாக. நாம் எடுத்துக்கூறும் அணி என்பது நூல்களில் வருவதொன்றே அல்ல. ஓடாவிகண்டு களிப்பதும், இன்னிசை வாணன் உணர்ந்து உகப்பதும் மற்றையோர் மனத்தே வரைந்து மகிழ்வதும் எல்லாம் இவ்வணியேதான். உலகத்தாருக்கு வெளிப்பட்டு விளங்கும் முறையில் வேறுபாடே யன்றி உள்ளீடாக உயிர்நிலையில் ஒன்றும் வேறுபாடில்லையாம்.

எண்நிலை:—உயிரானது ஐம்பெரும் பைகளுக்குள் (பஞ்சகோசம்) அடங்கி ஒளிர்வதுபோல உண்மையும் ஐம்பெரும் பைகளுக்குள் அடங்கி ஒளிர்கின்றது. ஐந்து நிலை மாடத்தின்மேலே நின்று அரசாள்கின்றது. உலகத்தில் உள்ள ஒவ்வோராராய்ச்சியும் ஐந்து படிக்கட்டுக்களை ஏறிக்கடந்துபோய் உண்மையின் உயர்நிலையை அடைந்து அதன் திருமுன்பு செல்கின்றது. அணிநூலும் அப்படித்தான். முதற்படியோ அட்டவணைப்படி. எங்கெங்கே அழகினைக் காண்கிறார்களோ அங்கங்கே உள்ள அழகிய சொற்றொடர்களையும், உவமைகளையும் ஒன்றிரண்டு மூன்று எனக் கணக்கிட்டு எழுதி வைத்துக்கொள்கின்றனர் ஒரு சாரார். அவர்கள் அதுதான் அணி நூலின் முடிவு என்பர். சந்திராலோகம் 100 அணி கூறும். அதற்கு உரை கூறவந்த குவலயானந்தம் நூற்றுக்கு மேலும் பல எடுத்துக் காட்டும். இவ்வாறு எண்ணிக் கொண்டு போனால் இதற்கொரு முடிவுதான் உண்டோ? இதைவிடக் கடலில் உள்ள மணலினை எண்ணுவது எளிதாக முடியும். அழகு அமைந்து விளங்கும் அரிய இடங்களில்தான் அணிகளின் இயல்பினைக் கண்டறிய வேண்டும் என்பது உண்மையே. பின்னோரது பாடல்களின் உண்மை நிலையை அறியவேண்டி முன்னோரது பாடல்களில் தலைசிறந்தவற்றை உரைகல்லாக உள்ளத்தே உருப்போடுங்கள் என்று ஓர் உளவு சொல்லிக் கொடுக்கின்றார் Mathew Arnold என்ற ஆங்கிலப் பேரறிஞர். ஆனால் அணியினை அறியவேண்டுமானால் அழகிய சொற்றொடர் ஒவ்வொன்றினையும் கண்டறிந்தே தீரவேண்டும் என்பது சின்னாள் பல்பிணிச் சிற்றறிவினராகிய நம்மை நோக்கிக் கூறியதாகாது; மேலுலகத்திற்கு விரைந்து செல்வோரை நோக்கிக் கூறியதாகும்.

பயன் நிலை:—எனவே இஃது இயலாது, இவற்றிற்கு அடிப்படையாக அமைந்து கிடக்கும் கொள்கை ஒன்றினை அறிய வேண்டும் என்று சிலர் மேலே புறப்பட்டார்கள். கருமமே கண்ணாயின. இந்தப் பெயர் வழிகளில் சிலர் அறவுரை புகட்டுவதே அணியின் அரும் பெரு நிலை என்றனர். தீயவழியில் சென்ற உலகினைச் சீர்திருத்துவதே அதன் சிறப்பென்றனர். அப்படியானால் அறநூல்களுக்கும் அணிநூல்களுக்கும் வேற்றுமை ஒன்றும் இல்லையாதல் வேண்டும். இந்த மயக்க உணர்ச்சி யெல்லாம், அறநூல்களும் அணிநூல்களும் செய்யுளாகச் சிறந்து விளங்குவதால் எழுந்தவையாகும். அருமையான அணிநூலினை இவ்வாறு அறவணஅடிகளுக்கு அடிமையாக்கித் தன் வலைவீச்சில் உலகினரைச் சிக்கவைக்கும் விலைமாதாக மாற்றித் தெருவில் விட்டு விடப் பலருக்கு மனம் வருவதில்லை. ஆகவே இன்னும் சிலர் இன்பம் ஊட்டுவதே இதன் இயல்பு என்றனர். ஆனால் இன்பமும் துன்பமும் ஒவ்வொரு தொழிலின் முடிவிலும் ஆலமரத்துப் பேய்போல நம்மைப் பிடித்துக் கொள்ளக் காத்துக்கொண்டே இருக்கின்றன. அணி ஆராய்ச்சிக்கும் அந்நிலை சிறப்பானதன்றே. தினவெடுத்தவன் சொரிகின்றான்; ஆறுதல் அடைகின்றான். அங்குமா அணிநூல் வந்து புகவேண்டும். அந்தயாழ் மீட்டுவதும் இந்தயாழ் மீட்டுவதும் ஒன்றென்பார் தொழுநோயரோ யாவர். அணிகளின் பொதுத் தன்மையை நாடிநிற்பதால் இவர்கள் அட்டவணைக்காரர்களைவிட ஒருபடி உயரச் சென்றவர்களே யாவர். எண்ணிலை (Empericism) மாடத்தைவிட்டுப் பயன்நிலை (Practicism) மாடத்தை அடைந்தவர் ஆவர். ஆனால் இவர்கள் இடறி விழுந்தால் அணிநூலே சொரிநூல் எனும் படுகுழியில் வீழ்ந்தொழிகின்றனர்.

அறிவுநிலை:—ஆனால் இவரிற்சிலர் இந்நிலையின் குறைப்பாட்டை அறிந்து மேலேறிச் சென்று மற்றொரு திரையையும் கிழித்தெறிந்து உண்மையைக் காண விரும்புகின்றனராய் உயிரின் உயர் நிலையைக் காட்டும் அறிவைப் பற்றியது அணிநூல் என்றனர். அறிவை வளர்ப்பதே அணியின் முடிவு எனக் கண்டனர். அறிவுநிலை (Intellectualism) மாடத்தில் கண்டது உண்மையானால் அறிவு நூல்களுக்கும் அணிநூல்களுக்கும் உள்ள வேற்றுமை தான் என்ன? அறிவுநூல்களின் உண்மைகளை எளிதாகவும் இனிதாகவும் எவ்வெவர் மனமும் மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் அணிகள் நிறம்பக் கூறுவதே அணியின் அரும்பணி. எடுத்துக் கொண்ட

பொருளை வெளியிடும் வகையில்தான் வேற்றுமை உண்டேயன்றி வேறொன்றும் காணோம் என்றனர். அணிகளின் இயல்பானது உயிரின்உயர்நிலையைக் குறிப்பதே என்றஅளவில் ஒருபடி உயரச் சென்றிருந்தாலும் இதுவும் ஒருவகையில் கீழ்ப்படியே யாகும். அறிவு நூலுக்கும் அணி நூலுக்கும் வேற்றுமை இல்லை என எவ்வாறு கூறமுடியும். கம்பனது அழகு கனிந்தொழுகி இன்சுவை ததும்பும் அணிநூலும், கணாதரது அறிவு முதிர்ந்து தேறி நுண்மை திகழும் எண்ணூலும் (தர்க்கம்) ஒன்றுதானா? அவை ஒன்றானால் ஒளியும் இருளும்கூட ஒன்றாகவே முடியும்.

அன்மை நிலை:-இதனை அறிந்து மேலொருபடி ஏறிப் போய் "அன்மை நிலை" (Agnosticism) மாடத்தைச் சேர்ந்தனர் சிலர். தாம் ஏறிவந்த படியை எல்லாம் எண்ணிப் பார்த்தனர். அப்படிகள் எல்லாம் ஏறிவந்தவர்கள் இருக்க இடம் தாராது அவர்களை இடறிவிழச் செய்ததையும் நினைத்துக் கொண்டனர். ஆகவே இன்னதுதான் அணியின் இயல்பென அறுதியிட்டுக் கூற முடியாது என்றனர். ஆனால் முன்னைய நிலைகளில் கண்ட இயலெல்லாம் அணியின்இயல்பு அல்ல என்று உறுதியாகக் கூற முடியும் என்றனர். அது அல்ல, இது அல்ல, என்பதோடு இவர்கள் நின்றுவிட்டனர், இத்துணை தூரம் வந்தபிறகு இவர்கள் இவ்வாறு கையை விரித்துவிடுவதும், கண்ணை மூடிக்கொள்வதும் எல்லோருக்கும் ஏமாற்றமாகவே முடிகின்றன.

அறிதுயில் நிலை:—கண்ணை மூடிய சிலர் ஒரு படி மேலேறிப்போய் அறிதுயில் நிலை (Mysticism) மாடத்திற் புகுந்து அறிதுயிலி லமர்கின்றனர். அணியானது அறிவையும் கடந்துசென்ற அருநிலை என்று முடிவு கட்டுகின்றனர். அறிவினிற்கோர் அணிமுடியாயது அணியே என்கின்றனர். அந்நிலையில் நின்று அனைத்தையும் அறியலாம் என்கின்றனர். ஆனால் இதுவும் முடிந்த முடிபாகாது. ஐந்தாந்திரையும் அறுந்து விழவேண்டும்; உள்ளிருக்கும் பைக்குடமும் உடைந்தால்தான் உண்மை பிறக்கும். அறிவுநூல் அணியினைப் பற்றியும் ஆராய்கின்றதல்லவா? அவ்வாறு அறிவிற்கெதிரே அதன் கையிற் சிக்குண்டு அது வேண்டியவாறு முன்னும் பின்னும் கீழும்மேலும் புரட்டியும் உருட்டியும் தன்னை ஆராய்ந்துபார்க்க அதற்கு அடங்கி அமர்ந்தஅணியானது, அறிவினின்றும் தப்பிக்குதித்து அவ்வறிவின் தலைமேலேயே குந்தி நிற்பது எவ்வாறு முடியும்? ஆகவே அறிவிற்கு மேலே அமர்ந்ததே அணி என்பதும் ஒரு அணியாகவே முடியும்.

உண்மை நிலை-உணர்வு:—இதுதான் என்ன? அணியினை அறிவின் பழம் என்பான் ஏன்? தலைகீழாகப்போனதால் அல்லவாவந்தது இந்தத்தத்தளிப்பு. அறிவின் வேரே அணிஎன்பது உண்மையாகாதோ? இவ்வாறு நூலேணியில் மேலோ கீழோ இருப்பதால் ஏற்றத்தாழ்வு ஒன்றும் இல்லை. இயற்கைநூல் (Natural Philosophy) இயற்கையை ஆராய்ந்தறிகிறது. வரலாற்றுநூல் (History) ஒவ்வொரு பொருளைப்பற்றியும் அறிந்தவற்றைக் கோவைபடுத்திப் பொருள்களின் பொதுத்தன்மையை ஆராய்ந்து முடிவுகட்டுகின்றது. இவ்வியற்கைநூல், தாக்கப்பட்டால் அன்றி ஒவ்வொரு பொருளும் தனது நேரோடும் நிலையையோ அசையாது நிற்கும் நிலையையோ விட்டொழிவதில்லை என்று இயம்புகின்றது. இஃது இயற்கையில் கண்டதொரு திட்டம் (First Law of Motion) ஒவ்வொரு பொருளின் நிலையினையும் வரலாற்றினையும் கண்டறிந்து அப்பொருள்களின் பொதுத்தன்மையாக உள்ள இவ்வுண்மையை இயற்கைநூலறிஞர்கள் உலகிற்கு எடுத்துரைத்தார்கள். இனி வரலாற்றுநூலோ ஒவ்வொரு பொருளின் பொதுத்தன்மையையும் அறிவுநூல் (Logic or Philosophy) கண்டவாறே அறிந்துகொண்டு, ஒவ்வொரு பொருளின் கதையினையும் தொடர்ச்சியாகச் சொல்லிக்கொண்டு போகின்றது. நாட்டுமக்களின் கதையையோ, விலங்குகளின் கதையையோ, பொருள்களின் கதையையோ எழுதுவதென்றால் ஒவ்வொருவர் கதையினையும், ஒவ்வொரு விலங்கின் கதையினையும், ஒவ்வொரு பொருளின் கதையினையும் எழுதிமுடியுமா? மக்களின் நிலையிலோ, விலங்குகளின் நிலையிலோ, பொருள்களின் நிலையிலோ பொதுவாகக் காணக்கிடக்கின்ற உண்மைகளை எடுத்துக்கொண்டு அவற்றின் கதையைத் தான் எழுதிப்போக முடியும். அறிவுநூலோ தான் காணும் பொருள்களின் பொதுத் தன்மையை அறிந்து கூறுகின்றது. பச்சைநிற வீட்டையும், பவளநிறவீட்டையும், கல்வீட்டையும், மண்வீட்டையும், கூரைவீட்டையும், மாடி வீட்டையும் காண்கின்றோம். அறிவுநூல் இவற்றின் வேறுபாட்டை விட்டொழித்து, இவற்றினுள்ளே மறைந்து கிடக்கும் பொதுத் தன்மையை ஆராய்ந்தறிகின்றது. மக்களாயினோர் குடியிருப்பதற்குப் பயன்படுந் தன்மையை வற்புறுத்துகின்றது. இனி அணிநூலோ (Aesthetics.) காணும் உலகத்தை இவ்வாறு கைவிட்டு விடுவதில்லை; பொருள்களைப் பொது நோக்காகப் பார்த்துப் போய்விடுவதில்லை. ஒவ்வொன்றையும் சிறப்பாகப் பார்த்துத் தெளிவாகப்புகைப்படம் பிடித்தாற்போல மனதிலே ஊன்றிப் பதியவைத்துக்கொள்வதே அணிநூலின் வேலை. இவ்வாறு ஒவ்வொரு பொருளையும் முழுமுழுப் பொருளாகக் கண்டபடி அறிந்து மகிழ்வதே அணிநூலின் தொழிலாகும். ஆகவே இவ்வணிநூல்தான் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக விளங்குகின்றது. அதனால்தான் மிக்க கீழ்நிலையிலுள்ள மக்களிடத்தும் இதனைக் காண்கின்றோம். உயர்நிலை யடைந்தாலும் இது நம்மைவிட்டுப் பிரிவதில்லை. வீட்டுநிலையை நூல்களில் கூறியதினின்றும் அறிவதொன்று, நாமே அந்நிலையை அடைந்து உணர்வதொன்று. முன்னையது அறிவு நிலை; பின்னையது உணர்வுநிலை; இஃதே அணிநிலையாகும். இதுபற்றியன்றே திருவள்ளுவனாரும் மெய்யறிவு என்னாது மெய்யுணர்வு என்று பேசுகின்றார். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது; எனவே மேட்டுச் சுரைக்காயேவேண்டுவது. அணிநூலைவிட மற்றைய நூல்கள் சிக்கலானவை என்பது உண்மையே. அணிகொண்டு திரித்த புரிநூலே அறிவு நூலாதலின் அது முறுக்கேறியதேயாகும். அதைவிட வரலாற்றுநூல் சிக்கலானது. அதைவிட இயற்கைநூல் சிக்கலானது. சிக்கலாய் இருப்பதுபற்றிச் சிறந்ததெனக் சொல்லிவிட முடியுமா? இவ்வணி இல்லையானால் அறிவுநூல் இல்லை; அதன் மேற்கட்டிய வரலாற்றுநூல் இல்லை, அதன் உயர இருக்கும் இயற்கைநூலும் இல்லையாம். ஆகவே ஏற்றத்தாழ்வு இவற்றிற்குள் எவ்வாறு இயம்புதல் கூடும். வீட்டுநிலையிலும் விலங்குநிலையிலும் விளங்கி நிற்பது இவ்வணியே அன்றோ?

188988

உணர்வும் சுவையும்:—இயற்கைநூலும் அல்ல; வரலாற்றுநூலும் அல்ல; அறிவுநூலும் அல்ல; தொழிலைப் பற்றிய பொருள்நூலும் அல்ல. அவ்வாறானால் இவ்வணிநூல் எதைக்கொண் டியங்குகின்றது. அறிவு, நினைவு, ஆராய்ச்சி, தொழில் என்பன இயற்கைநூல் முதலியவற்றிற்கு வேண்டிய உள்ளத்தின் பண்புகளாம். எனவே மிகுதியாக நிற்கும் உள்ளத்தின் பண்புகளே அணிநூலுக்கு அகப்பட்டனவாம். உள்ளுணர்வு, கற்பனை, உள்ளக் கிளர்ச்சி, சுவை, மெய்ப்பாடு என்ற உள்ளநிலைகள்தாம் அணியாகமாறி வெளிப்படுகின்றன. இவ்வாறு கூறுவதற்குப் பொருள் என்ன?

உணர்வும் அறிவும்:—நாம் பொருள்களைத் தெரிந்து கொள்ளுமுறை இரண்டு வகைப்படும்: ஒன்று உய்த்தறிதல். மற்றொன்று உண்டுணர்தல். ஒன்று அறிவு, மற்றொன்று உணர்வு. [(Intuition) உணர்ச்சி, உள்ளுணர்வு] ஒன்று தர்க்க ஞானம்; மற்றொன்று கற்பனா சக்தி. ஒன்று பொது உணர்ச்சி; மற்றொன்று சிறப்புணர்ச்சி, ஒன்று தொடர் புணர்வு, மற்றொன்று தனியுணர்வு. இவ் வேற்றுமைதான் என்ன? இவ்வுலகத்திலே ஏதோ ஒரு பொருளைக் காண்கின்றோம்: சிறப்பு இயல்புகளோடு அதனைத் தெரிந்துகொள்கின்றோம். கண்டபோது எந்த உள்ளக்கிளர்ச்சியோடு கூடி மனதிற் பதிந்ததோ அந்தப்படியே பின்னும் கண்டு மகிழ்கின்றோம். இதுவே உணர்வால் உணரும் முறை. "உணர்வாய் உண்கிறாயே உனக்கு உணர்வு இல்லையா" என்ற சொற்றொடரில் உணர்வு என்ற அருஞ் சொல்லின் அழகிய பொருளை அறிந்துகொள்க. இவ்வாறு கண்டு களிப்பதோடு நின்றுவிடுகிறோமா? உலகம் ஒன்று உண்டா? நாம் யார்? நமது உள்ளம் ஆர்? வந்தவாறெங்ஙனே போமாறேதோ? என்று பல கேள்விகள் தொடர்ந்தெழவில்லையா? இவற்றை ஆராயும்போது அறிவு வளர்கின்றது. ஒருபொருளைக் காண்கின்றோம். அதனது பொதுத் தன்மை மனதிற் பதிகின்றது. அந்த இனத்து மற்றையதோர் பொருளைக் கண்டவிடத்து முன்னையதன் இனம் என்கிறோம். முன்னையதை இரும்பென்றால் இதனையும் இரும்பென்கிறோம். இங்கேதான் அறிவு பிறக்கின்றது. கண்ட பொருளில் உள்ளீடாய் உள்ளனவற்றை ஆராயத் தொடங்குகிறோம். ஒருபொருள் உண்டு என்று உய்த்தறிதலும், அப்பொருளோடு மற்றைய பொருள்களுக்குள்ள தொடர்பினை அறிதலும், அப்பொருளின் பொதுத்தன்மையைக் கண்டறிதலும், அறிவின் செயலேயாகும். கண்டதைக் கண்டபடியே கண்டு களிக்கும்பொழுது கண்டகாட்சி கண்ணைவிட்டு அகல்வதில்லை. அக்காட்சியை ஒருபுறம் ஒதுக்கி அதற்குள்ளே மறைந்திருப்பவற்றை ஆராய்ந்தறிந்து வெளியிடுவதற்குள் முன்கண்ட காட்சியை அறிஞர்பலர் அடியோடு மறந்துவிடுகின்றனர். அதன்பயனாக உலகமலைவு என்ற குற்றம் பட எழுதிப் போகின்றனர். அத்தகையாரது கண்ணைத் திறக்கும் மருந்து உணர்ச்சி என்பதுதான். அறிவால் அறிந்து உண்மையைக்காணவருவார் உள்ளுணர்வால் உணர்ந்தும் உலகத்தோடு ஒட்ட ஒழுகுவாரானால் இவ்வாறு கைவிளக்கேற்றிக்கொண்டு கண்திறந்துபோய்க் கிணற்றில் விழமாட்டார்கள். கண்டகாட்சியை மறந்தவர்கள் தாம் "நெய்க்குத் தொன்னை ஆதாரமா" "தொன்னைக்கு நெய் ஆதாரமா" என்று ஆராயப்புகுவர். ஒரு மரத்தில் ஒருநூறு ஊர்க்குருவிகள் உட்கார்ந்திருந்தால் அவற்றை ஓட்டுவதற்கு எத்தனை முறை கல்லெறிய வேண்டும் எனப் பள்ளிச்சிறுவர்கள் ஒருவர்க்கொருவர் கேட்டுக்கொள்வதை நாம் கேட்டதில்லையா? வெறும் பொதுத் தன்மையை அறியும் அறிவு ஒன்றே இருந்தால், உண்மைக் காட்சியை மறந்து, ஊர்க்குருவி ஒன்றுக்கு ஒரு கல்லாக நூற்றுக்கு நூறு எனப் பிழையில்லாது ஒன்றும் வாய்ப்பாட்டைத்தான் ஒருவன் ஒப்புவிப்பான். பருக்கைக்கல் பட்டதும் பறவைகள் படும்பாட்டைப் பார்த்தது பார்த்தபடி மனக்கண்ணெதிரே பார்ப்பானானால் "காகமானவை கோடி கூடி நின்றாலும் ஓர் கல்லின் முன்னெதிர்நிற்குமா" என்று பாடுவான்.

காட்சியறிவு:—(Perception) கண்டது கண்டபடி கண்டுகளிப்பது என்ற உடனே காட்சியறிவு ஒன்றுதான் உள்ளுணர்வு என்று உய்த்தறிதல் ஒண்ணாது. நாம்கண்ட பொருள் உள்ளத்திலே உருப்பெற்றெழுந்து கூத்தாடுவதுபோல நம்மெதிரே இல்லாத பொருள்களும் ஓர் உருப்பெற்றெழுந்து புத்துயிரோடு புகுந்து விளையாடுகின்றன. முன்னையதுபோலப் பின்னையதும் உள்ளுணர்ச்சியேயாகும். இவ்விரண்டினையும் உள்ளுணர்வால்தான் காண்கின்றோம். உள்ளது இல்லது என்ற வேற்றுமை உள்ளுணர்விற்கு இல்லை. உண்மை இன்னது கட்டுக் கதை இன்னது என்று அறியாத குழந்தையின் மனத்தை ஊன்றிப்பார்த்தால் உள்ளுணர்வின் உருவத்தை ஒரு சிறிது உணரலாம். அணிநூலை ஆராயும்போது அந்த நிலையில்தான் இருக்கின்றோம்.

OUR OWN PUBLICATIONS

(5) **1. Life of Barrister Savarkar**

By Chitra Gupta ... 1 8 0

BOOKS BY SAVARKAR:—

Hindu-Pad-Padashahi	... Rs.	3	0	0
Hindutva	...	1	4	0
An Echo from The Andamans	...	1	0	0

JUST PUBLISHED

2. The Aravidu Dynasty of Vijayanagara

Volume I. 1542 to 1614. ... Rs. 10 0 0

By Rev. Henry Heras, S.J.M.A.

Prof. of Indian History, St. Xavier's College, Bombay. with a foreword by Sir R. C. Temple.

3. Economic Development

Snap-shots of World-movements in Commerce, Economic Legislation, Industrial and Technical Education

By Prof. Benoy Kumar Sarkar, M.A. Rs. 8

4. England's Educational Policy in India

By V. V. Oak, B.A., S.T.C. ... Rs. 2 0 0

'FORWORD' WRITES:— "This book is a document that will rise up to accuse before the tribunal of history."

'MODERN REVIEW':—"It is certainly a book which all amply repay perusal by every student of Politics."

B. G. PAUL & Co., Publishers,

2. Francis Joseph St., G. T. Madras.

(6) ஸ்ரீமத் வால்மீகி

இராமாயண வசனம்.

பண்டித நடேச சாஸ்திரியாரால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

தகுந்த தமிழ் வித்துவான்களால் பார்வையிடப்பட்டு பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

இப்பதிப்பின் விசேஷம்

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றி யிருந்தபோதிலும், செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும், சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ் வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் நன்றாய்ப் பரிசோதித்து, வெகுபொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

பாலகாண்டம்	244 பக்கம்	6 காண்டம்
அயோத்தியாகாண்டம்	501 „	
ஆரணியகாண்டம்	254 „	ரூ. 15
கிஷ்கிந்தாகாண்டம்	226 „	
சுந்தரகாண்டம்	260 „	
யுத்தகாண்டம்	702 „	
சுந்தரகாண்டம் தனியே		ரூ. 2 4 0

கே. மஹாதேவன், புஸ்தக வியாபாரம்,

1, ராமசாமிபிள்ளை தெரு, வேப்பேரி, சென்னை.

எமர்ஸன் எழுதிய

இராஜ்ய தந்திரம்.

("Politics" by Emerson.)

மொழி பெயர்ப்பு (57 வது பக்கத் தொடர்ச்சி.)

பொருள்படைத்த பேர்களே பொருளைப்பற்றிய சட்டங்களை நிர்மாணம் செய்ய உரிமையுடையவர்களோ, மற்றவர் செய்தால் சரிவர அது சமமாய் அமையாதோ என்னும் இக்கேள்வியின் நியாயம் எதுவென்றுதீர்மானம் செய்வது சுலபமல்லாமற் போனாலும், நமக்கு இயற்கையிலேயே காப்பாக அமைந்த விஷயங்களை நினைத்துக் கொள்வது நல்லது. சட்டமும் அதைச் செலுத்தும் அதிகாரிகளும் நம்மைக் காப்பதைவிட மிகநன்றாய்க் காக்கின்றவை வேறு சில இருக்கின்றன. இல்லாமற் போனால் நாடெல்லாம் ஒரு நொடியில் பாழாகிவிடுமே. ஏனெனில், எந்தநாட்டிலும் ஜனங்களில் பெரும்பகுதி வயதிற் சிறியவரும் மடயர்களுமாகவே எப்பொழுதுமிருப்பர். வயதொடு அனுபவமும் முதிர்ந்தவர்களுக்கே நியாயஸ்தலங்களும் (Courts), இராஜ்யதந்திரிகளும் (Statesmen) வெறும் பொய்யானவொரு கபடவேஷம் என்பது வெட்டவெளி யாகின்றது. ஆனால் அவர் இறந்துவிடுகின்றனர். இறந்த அத்தந்தையர் சேகரித்த அனுபவஅறிவைப் பிள்ளைகள் பிதிரார்ஜிதமாகப் பெற்றுக்கொள்வதில்லை. இப்பிள்ளைகளோ, தகப்பன்மார் தம் வயதில் இருந்தபோது எண்ணியதுபோலவே, தாங்கள் படிக்கும் வர்த்தமானப் பத்திரிகைகள் (News-paper) சொல்வதே மெய்யென்று நம்புகின்றனர். இப்படி அசடர்களாயும் மோசம்போகக் கூடியவர்களாயும் இருக்கின்ற ஜனத்தொகையின் பெரும்பகுதியை (majority) வைத்துக்கொண்டு தேசங்கள் பாழாகாமல் என்ன செய்யும். ஆனால் தெய்வச் செயலாய், இவர்களது மடத்தனத்தையுங்கூட ஒரு எல்லைக்குள் கட்டிவைக்கக் காவலொன்று உளது. ஆள்பவர்களது அசட்டுத்தனமும் பேராசையுங்கூட அதைக் கடந்து போகமுடியாது. அந்தக்காவல் என்னவென்றால், இயற்கை விதிகள்தாம். மனிதனுக்கு இருப்பது போலவே வஸ்துக்களுக்கும் ஏற்ற விதிகள் உண்டு. தம்மைக்கண்டபடி ஆட்டிவைக்க வஸ்துக்கள் இடம் கொடுப்பதில்லை. விதைத்து எரு இட்டாலல்லாமல் தானியம் விளையுமோ? அறுத்துத்தாம் அனுபவிப்பார் என்ற நிச்சயம் இல்லாமற்போனால் மனிதரும் பயிர்த்தொழில் செய்யமாட்டார். எந்த ஏற்பாட்டிலேனும் சரி, மனிதரும் சொத்தும் தத்தமக்குரிய அதிகாரத்தைச் செலுத்திக் கொள்வதே நேரும். ஒரு வீசை மண்ணையெடுத்து எவ்வளவுதான் சாமர்த்தியமாய் மூடிவைத்தாலும், நீராயுருக்கினாலும் காற்றாய் மாற்றினாலும், என்ன செய்தாலும் சரி, அந்த ஒருவீசை மண்ணிற்கு இருக்கின்ற பாரம் இருந்துதானே தீரும். மனிதரும் அப்படியே. ஒருவனுக்கு இருக்கின்ற புத்தியும் குணமும் அவைகளுக்குரிய சக்தியை எந்தச் சட்டத்தின்கீழும் எப்படிப்பட்ட கொடுமையின்கீழும் காட்டியேதீரும். வெளிப்படையாகக் காட்டமுடியாத சந்தர்ப்பத்தில் இரகசியமாகக் காட்டுவான். சட்டத்தின் சார்பாக அல்லாமற்போனால் அதற்கு விரோதமாகவும், மருந்தாக முடியாதவிடத்தில் விஷமாகவும், நியாயமாகவோ அல்லது பலத்தையே ஆதாரமாகக் கொண்டோ, அவனுக்கு இயற்கையாய குணங்களும் புத்தியும் ஊக்கமும் வெளிவந்து தம் சக்தியைக் காட்டாமற் போகா.

இந்தவிதம் காட்டக்கூடிய சக்தி ஒவ்வொருவனுக்கும் எவ்வளவு இருக்கின்றது என்று எல்லையிட முடியாது. ஏனெனில், புத்தியும் ஊக்கமும் ஒருபுறமிருக்க, மனிதர் பாபபுண்ய எண்ணங்களுக்கும் தெய்வத்தின் வல்லமைக்கும் கருவிகளாயிருக்கின்றனர். தேசசுதந்தரம் மதப்பற்றுப் போன்ற நோக்கங்கள் பொது ஜனங்களின் கருத்திற்குள் புகுந்து ஆளத்தொடங்கிவிட்டால் அப்புறம் அவர்கள் செய்யவல்லது எவ்வளவு என்பது கணக்கிற்கு அடங்காது. ஒரு தேசத்து ஜனங்கள் எல்லோரும் மனம் பொருந்தித் தம்சுதந்தரத்தை அடைவதென்றோ அல்லது பிறர் நாட்டை வெல்வதென்றோ நினைத்து முயல்வார்களானால், ஜனத்தொகைக் கணக்கையெல்லாம் குழப்பிவிட்டு, இருக்கின்ற சாதனங்கள் சிறிதானாலும் செய்கின்ற காரியங்கள் பெரியனவாய்ச் செய்து முடித்து விடுவார்கள். கிரேக்கர் ஸாரஸன் ஸ்விஸ் அமரிக்கர் பிரெஞ்சுகாரர் முதலிய சாதியார் செய்த காரியங்கள் இப்படிப் பட்டவை.

இந்தவிதம் கணக்கிற்கு அடங்காமல் ஒவ்வொரு சமயம் தம்சக்தியை மனிதர் செலுத்தக்கூடியவர்களாயிருக்கின்றனர். ஆனால் பொருள்களுக்கோ ஒவ்வொரு அணுவிற்கும் அமைந்த சக்தியை அதனளவே செலுத்துகின்ற தன்மை மாறாது நடக்கும் திறமை ஒன்றேயுண்டு. ஒரு அணு என்றால் அது, தானியமோ மற்றெந்த வஸ்துவோ அதற்கீடான ஒன்றிற்குப் பதிலாய்க் கருதப்படுகின்றது. மனிதனுக்கு ஏற்படும் அவசியங்களினால் அந்த அணுவிற்கு ஒரு மதிப்பு ஏற்படுகின்றது. ஒரு அணு இருந்தால், இத்தனை அரிசி, இத்தனை கட்டை அல்லது இத்தனை வெளிச்சம் என்ற திட்டம் சொல்லலாம். செல்வவந்தர்களைப்பற்றிச் சட்டங்கள் என்ன வேணுமானாலும் செய்துகொள்ளட்டும், அந்த ஒரு அணுவிற்கு இருக்கின்ற சக்தி மாத்திரம் அதைவிட்டு அகலாது. பித்தேறிய ஒருபோது சட்டம், சொத்துடையவர்களுக்கு எவ்வித அதிகாரமும் இருக்கப்படாது என்று சொல்லிவிட நேரலாம். அவர்களுக்கு வோட்டுக் கொடுக்கிற உரிமைகூட இல்லாமற் போகட்டுமே. இருந்தாலுமென்ன. இந்தச் சட்டத்திற்கும் மேலான ஒரு விதியினால் வருஷா வருஷம், ஆஸ்தியுள்ளவர்களே ஆஸ்திசம்பந்தமான சட்ட நிர்மாணங்கள் செய்துகொண்டு வருகின்றவர்களாவார்கள் என்பதிற் சந்தேகமில்லை. சொத்து இல்லாதவன் அப்பொழுதும் சொத்துடையவர் சொற்படி சட்டங்கள் எழுதுகின்றவர்களாகவே ஆவார்கள். சொத்துடையவர்கள் செய்ய வேண்டுமென்று விரும்புகின்றவைகளை, அப்பொழுதும், சொத்தினது முழு பலமும், சட்டத்தின் மூலமாகவோ, அல்லது சட்டத்திற்கு மாறாகவோ செய்துவிடும். இங்கு நான் சொத்து என்று சொல்லும்போது தனித்தனியாகச் சிலருக்கு இருக்கின்ற பெரிய ஆஸ்தியை நினைக்கவில்லை. மொத்தத்தில் அந்நாட்டிலிருக்கின்ற சொத்துக்களையெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து நினைத்தே பேசுகின்றேன். பணக்காரன் தேர்தலில் தோல்வியடைய நாம் பலமுறைகாணலாம். அப்பொழுது கூடக் கைப்பணம் தன் சக்தியையிழந்து தோல்வியுற்றதே என்று எண்ணவேண்டாம். ஏனெனில், அவனு

க்கு விரோதமாக வோட்டுப் போட்டவர்கள் எல்லாரும் தனித்தனி ஏழைகளாயிருந்தாலும், இந்த ஏழைகளுக்குள்ள உடைமைகளை எல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து மதிப்புப்போட்டால், தோற்றவன் சேர்த்துவைத்திருந்த ஆஸ்தியைவிட அதிகமாகவே யிருக்கும். உடைமை என்பது ஒன்று மில்லாதவன் இல்லை. மாடாவது ஒன்றிருக்கும். கலப்பையாவதிருக்கும். ஒன்றுமில்லாமற்போனால் அவனவன் கைகளேயாவது அவனுக்கு உடைமையான பொருளாகும்.

இந்தவிதம் எந்த ஒரு அவசியத்தினால் மனிதர்களுக்கும் பொருள்களுக்கும் உள்ள இயற்கை உரிமை, துஷ்டர்களாயும் மடயர்களாயுமிருந்து சட்டம் செலுத்துவோர்களால் விளையும் கொடுமையினின்று காப்பாற்றப்படுகின்றதோ, அதே அவசியம் அந்த அந்தத் தேசத்தைச்சேர்ந்த ஜனங்களுக்குத் தகுந்த அரசியல்முறையும், அதை நடத்தும்வகையும் எவையெனத் திட்டம் செய்துவிடுகின்றது. ஒரு தேசத்திற்குப் பொருந்திய இம்முறையையும் வகையையும் இன்னொரு தேசத்திற்கு மாற்றிக்கொள்ள இயலாது. அரசன் சுயேச்சையாய் அதிகாரம் செலுத்துவது ஒருமுறை. அரசனானவன் மந்திரிகளின் சொற்கேட்டு அவர்களுக்கு இணங்கி ஆள்வது வேறுமுறை. செல்வாக்குடைய சிலர் சேர்ந்து நாட்டினதரசை நடத்தி வைக்கும் முறையும் உண்டு. அல்லாமல் பொதுஜனப் பிரதானமாய் நாட்டவரனைவரும் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள நினைத்துப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துச் செய்யவேண்டியதும் இதுவெனச் சொல்லித் தேசகாரியங்களை அவர்களைக் கொண்டு செய்து வைத்துக் கொள்வதும் மற்றொருவித அரசியல்முறை. இவைகளுக்குள் எந்தமுறை நல்லது எந்தமுறை கெட்டது என்று ஏற்றந்தாழ்வு பார்கப் புகுவது சரியல்ல. எந்த தேசத்தவர்களுக்கு எந்தமுறை பொருந்துமோ அந்த முறையே அவர்களுக்கு நல்லதென்று நினைக்கவேண்டும். இவைகளை அரசியல் கொள்கைகளாக மாத்திரம் வைத்துக்கொண்டு ஏற்றந்தாழ்வு பாராட்டிவாதாடுவது ஒருபுறமிருக்க, எந்தவித அரசுமுறையை நடத்திவைக்கும் போதும் பொதுவாக ஒன்றிற் கிருக்கின்ற குறைகளை மற்றவைகளிலும் காணவே காண்கின்றோம். அரசியல்களெல்லாம் கையாளும் தன்மையில் கெட்டுக் கிடக்கின்றன. நல்லவர் சட்டத்திற்கு முற்றிலும் கட்டுப்பட்டிருக்கக் கூடாது. இராஜ்ய தந்திரம் என்று அழைக்கப்படுகின்ற வகையொன்றே அரசாட்சிக்குப் போதாதா! தந்திரம், என்றாலே கபடம் என்பது அர்த்தம். அரசியல் எல்லாம் ஒரு பெரும் மோசம் என்று இதனால் குறிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு அரசியலிலும் இரண்டு கட்சிகள் இருக்கும். ஒரு கட்சியினர் அரசாங்கத்தாரை எதிர்ப்பவர், மற்றவர் சார்புநின்று தாங்குபவர். அரசியல் நடக்கின்ற விஷயத்தில், அதை நடத்துகின்றவர்கள் துஷ்டர்களும் மூடர்களுமாயிருந்தாலும் மனிதர்களுக்கும் பொருள்களுக்கும் உள்ள உரிமையும் சக்தியும் கெடாமல், அசட்டுச் சட்டங்களுக்கும் மேலான ஒரு விதியினால் காக்கப்பெறுகின்றன வென்று முன்னிங்கு விளக்கிக் காட்டினேன். இனிக் கட்சிகள் என்பவை அரசியலின் பாகங்கள். எல்லாக் கட்சியிலும் கூட மூடர்களும் துஷ்டர்களுமிருப்பார்கள். முன் சொன்ன அதே விதிதான் மீண்டும் கட்சிகளால் வரும் கேட்டினின்று மக்களை ஒருவாறு காப்பாற்றி வைக்கின்றது. கட்சியின் தலைவர்கள் கூறுகின்ற புத்திமதி ஒருபுறமிருக்க அக்கட்சியைச் சேர்ந்தவர்களது இயற்கையறிவு வழிகாட்டியாகின்றது. கட்சிகள் பிறக்கின்றபோது நேர்மைக்கு விரோதமான தோன்றும் அவைகளிடத்தில் இருக்காது. மூரண்கொண்டு சில காரியங்கள் அவை செய்யலாம். இருப்பினும் தோன்றுகின்ற கட்சிகளை நாம் வைவதென்றால் அது வாடைக்காற்றையும் கோடை வெயிலையும் வைகின்றது போலாகும். அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர் தாம் அடைந்த நிலைமைக்குத் தகுந்த உத்தரம் சொல்ல இயலாது. எப்படியோ அவர்களை வந்தடைந்த இலாபம் போய்விடாமல் காத்துக்கொள்கின்ற நிலையிலேயே அவர் நிற்கின்றனர். பெற்ற இலாபத்தைப் போற்றிக்கொள்வதென்பது இயற்கை தர்மம். இதைமட்டும் செய்கின்ற வரையில் எந்தக் கட்சியினரிடத்தும் குறை சொல்வதற்கில்லை. ஆனால் இந்த இயற்கை நிலையைவிட்டுத் தங்களது ஏற்பாட்டிற்கு ஒருவித சம்பந்தமும் இல்லாத விஷயங்களுக்குள் சுயநயம் கருதியும், தலைவர்களென்பார்கள் இடுகின்ற ஏவலுக்குக் கீழ்ப்படிந்தும், தலையிட்டுக் கொள்கின்றபோதுதான் நாம் அக்கட்சியைக் கண்டிக்க வேண்டி வருகின்றது. சேர்ந்திருக்கின்ற ஆள்கள்தாம் கட்சியைக் கெடுத்துக்கொண்டே வருகின்றனர். கட்சியின் நோக்கம் வரையில் பார்க்கப்போனால் அயோக்யதையொன்றுமில்லாம லிருக்கலாம். அதைச் சேர்ந்த தலைவர்களைப்பற்றியோ இப்படிச் சொல்வதற் கில்லையே. தாங்கள் நடைத்திவைக்கின்ற பொதுஜனங்கள் சொன்னபடி கேட்டு அவர்காட்டும் ஊக்கத்தால்வருகின்ற பலனை எல்லாம் தலைவர்களே அனுபவித்துக் கொள்கிறார்கள். பொதுவாகக்கூறினால், சமயோசிதமாகக் கட்சிகள் சேர்கின்றனவே யல்லாது தர்மக்கொள்கைகளே ஆதாரமாக அவை பிறப்பதும் அரிது. விவசாயமும் வர்த்தகமும், முதலாளியும் தொழிலாளியும், எதிரெதிர் மாறுபட்டு நிற்பானேன். தர்மபரிபாலனம் செய்வதென்றால் இடமாறி இவைகளெல்லாம் எந்த ஏற்பாட்டையும் பொதுவாகப் பாராட்டவேண்டாமா! தர்மக் கொள்கைகளைப் பற்றி எழுந்தகட்சிகளும் சில உள. மதவகுப்பு, வரிபோட்டுத் தடுக்காத வர்த்தகம், வோட்டுரிமை அனைவர்க்கும் சமமாதல், சிரசாக்கினைச் சட்டத்தை நீக்கிவிடல், போன்ற கட்சிகள் அவைகளுக்கு உதாரணம். ஆனால் இவைகள் கூடக் கொள்கையின் உயரிய ஆதாரத்தால் நிற்காமல் வரவர 'அவன் சொன்னான் இவன் செய்தான்' என்று ஆள்களை முன்னிற்கும்படி தாழ்ந்துவிடுகின்றன. இப்படித் தாழ்ந்த வுடன் யாருக்கும் இதில் ஊக்கம் நிலை நிற்கின்றதில்லை. நம்நாட்டில் இப்பொழுது (அமெரிக்காவில் அறுபது வருஷங்களுக்குமுன்) முக்கியமா யிருக்கின்ற கட்சிகளுக்குள்ள தோஷம் என்னவென்றால், அவையொன்றும் பிராணாதாரமான ஆழ்ந்த விஷயங்களொன்றிலும் வேரூன்றாமல், உலகத்திற்கு எந்நாளும் பயனற்றதாய், அந்த அந்த நிமிஷத்தில் கிளம்பி மறைகின்ற விஷயங்களைப் பற்றிக்கொண்டு தலைவிரித்து ஆடுவதேயாகும். இப்பொழுது இங்குத் தேசத்தை இரண்டுபடவைக்கும் கட்சிகளுள் ஒன்றன் கொள்கை சிறந்தது, மற்றதைச் சேர்ந்த ஆட்கள் சிறந்தவர். தத்துவ அறிவு உடையவரும் கலையுணர்வு உடையவரும் தெய்வ பக்தியுடையவரும் ஆகி இருப்பவர் எளியோரை வலியோர் நலியாதிருக்கும் பொருட்டுக் காப்பதற்கென்று அமைந்த கட்சியைச் சேர்வதற்கே முன்வருவர். ஆனால் இந்தச் சுதந்திரவாதக் கட்சியின் கொள்கையை நிறைவேற்றி வைக்கத்தகுந்த ஆள் 'இவன்' என்று ஒருவனைப் பொதுஜனங்கள் வோட்டுக்கொடுக்கக் காட்டும்போது, அவனையோ அவர்களால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. பொதுஜன சுதந்தரத்தினால் பொதுஜனங்களுக்குநன்மை உண்டாக வேண்டும் என்னும் நோக்கம் இப்பிரதிநிதிகளாய் நிற்பவர்களுக்கு இல்லை. அடியோடு யாவையும் மாற்றவேண்டும் என்னும் கட்சியோ (Radicals) இருப்பதை அழித்துவிட வேண்டுமென்பது தவிர

வேறெதையும் குறிகொண்டிருக்கக் காண்பதரிது. அதற்கு அன்பு இல்லை. அந்தத்தில் எதைஅடைவதென்ற திவ்யநோக்கம் ஒன்றும் அதற்கில்லை. பகையினாலும் சுயநயாசையினாலும் இருப்பதைப் பாழாக்குவதே அதன் காரியமாகின்றது. மிதவாதக் கட்சியைப் (Conservatives) பார்ப்போம். அதைச் சேர்ந்தவர்கள், நிதான புத்தி யுடையவர்களும் சாமர்த்தியசாலிகளும் மனத்தேர்ச்சியுற்றவர்களும் ஆகிப் பெரும்பான்மை அமைகின்றனர். இருந்தாலு மென்ன. நல்லதென்று நினைப்பதைச் செய்துமுடிக்க இவர்களுக்குத் தைரிய மில்லை. இருப்பது போகாமல் காத்துக் கொண்டாலே போதுமென வியகரிக்கின்றனர். யாவர் சுய உரிமைக்கும் இக்கட்சி தன் தோளைக் கொடுப்பதில்லை. உண்மையாய நலமொன்றும் நாடுவது மில்லை. கொடிய குற்றங்களைத்தான் கடிகின்றதா! பெருந்தன்மை வாய்ந்த ஆட்சி முறைகளை அனுசரிக்கின்றதா! மண்டபங்கள் கட்டுவிக்கின்றதா! காவியங்கள்தான் எழுத வைக்கின்றதா! கலையுணர்வை வளர்க்கின்றதா! மதப்பற்றைப் போற்றுகின்றதா! பாடசாலைகள் ஸ்தாபிக்கின்றதா! சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்கின்றதா! அடிமைகளை விடுவித்து ஏழைகளுக்கு உரிய உறவுதான் கொண்டாடுகின்றதா! ஒன்றுமில்லையே. கட்சி எதுவா யிருந்தாலென்ன, அது அதிகாரத்திற்கு வந்தவுடன் நாட்டின் நலங்களைக் கொண்டு என்ன அநுகூலம் செய்து வைக்கின்றது! சாஸ்திர ஆராய்ச்சியிலும் கலைகளின் வளர்ச்சியிலும் தர்ம பரிபாலனத்திலும் பெறத்தக்க பயனொன்றும் உலகம் கட்சிகளின் மூலமாய் எதிர் பார்ப்பதற்கு இல்லையே.

மலர்வனம்

தத்தையீர் பொத்தும் நும்வாயை.

காதலின் நுட்பம் ஊடலில் தோன்றும். நாயகனும் நாயகியும் அன்பு முதிரத் தம்முள் அளவளாவுங்காலத்து நாயகிக்குக் கோபமொன்று எங்கிருந்தோ எதிர்பாராமல் வந்துதோன்றி, "என்னை அண்டேல்" என நாயகனைக் கைவிதிர்த்துப் பகை பாராட்டுபவளாவள். பார்க்கப்போனால் அதற்கு நிமித்தமும் இராது. அவ்வியத்தால் நாயகன்பால் குற்றமொன்றைக் கற்பித்துக்கொண்டு தலைவி கோபம் கொள்வதாகும். அவள் கொண்ட கோபத்தைமாற்றி முன்போல் இன்பம்பெற நாயகன் பலவேறு உபாயங்களை நாடுவான். ஊடியமாதரிடத்தில் நியாயவாதம் பயன்படாதென்பது அவனுக்குத் தெரியும். ஆகையால் "யான் தோற்றேன்" என்று அவள் பாதத்தில் விழுந்துவிடுவன். இதுகண்டு அவள் மனம் இளகும் பதம்பார்த்துத் தன்பால் அவள்கண்ட பிழை தகாதென உரைப்பான். எனினும், அவள் சீற்றம் தாழ்ந்தாளாயினும் நாணமே மேலிட்டுப் பின்னும் கூடாதிருப்பாள். எவ்வளவுநேரம்! ஊடற்குத் தேடியதுபோல் கூடற்கும் ஒரு நிமித்தம் கிடைக்கும். இவ்வாறு ஊடல் கொள்வதையும் ஊடல்தீர்வதையும் எடுத்துக் கவிகள் ஆங்காங்கு வெகு அழகாய் வரைந்துளர். இத்தகைய சம்பவமொன்று, சுமார் ஆயிரவருடங்களுக்கு முன் திருத்தக்கதேவர் என்பவர் ஆக்கியுள்ள "ஜீவகசிந்தாமணி" என்னும் நூலினின்று எடுத்துக் காட்டுவோம்.

இக்காப்பியத்திற்குக் கதாநாயகனாய் அமைந்த சீவகன் என்னும் அரசிளங்குமரன் போர்கள் பலபுரிந்து மீண்டு இலக்கணை என்பாளை மணந்து மணவறை சேர்ந்து

> தாம மார்பனுந் தையலு மெய்யுணர்
> வாமி தென்றறி யாது களித்தவர்
> தூமங்கொப் புளிக்குந் துகிற்சேக் கைமேற்
> காம னப்பணைக் கள்ளுக வைகினார்.

[தாம மார்பனும் - பூமாலையணிந்த மார்பினனான சீவகனும், தையலும் - இலக்கணையாகிய மாதும், மெய் உணர்வு ஆம் இது என்று அறியாது - தமதுசரீரமோ அல்லது உணர்ச்சியோ கலப்பது என்பது அறியாது கலந்து, களித்தவர் - களிப்படைந்தவராய், தூமம் - வாசனைப் புகைகள், கொப்புளிக்கும் - பரவி எழும், துகில் சேக்கைமேல் - பட்டுப் படுக்கையின் மீது, காமன் - மன்மதனது, அப்பு - அம்புகளாகிய புஷ்ப, அணை - சயனம், கள் உக - தேன் சொரிய, வைகினார் - இருந்தார்.]

அப்பொழுது அச்சீவகன்,

> மாதர் தன்வனப்பு நோக்கி
> மகிழ்ந்துகண் ணிமைத்தல் செல்லான்
> காதலித் திருப்பக் கண்கள்
> கரிந்துநீர் வரக்கண் டம்ம
> பேதைமை பிறரை யுள்ளி
> யழுபவர்ச் சேர்த லென்றாள்
> வேதனை பெருகி வேற்கண்
> தீயுமிழ்ந் திட்ட வன்றே.

[மாதர் - இலக்கணையின், வனப்பு நோக்கி - அழகைப் பார்த்து, மகிழ்ந்து - உளமகிழ்ந்து, கண் இமைத்தல் செல்லான் - தன் கண்கள் கொட்டாதவனாய், காதலித்து இருக்க - ஆசை மேலிட்டு இருக்க, (அதனால் அவன்) கண்கள் கரிந்து - கண் கரித்து, நீர்வர - நீர் வருவதை, (இலக்கணை) கண்டு - பார்த்து; (இவன் மனதிற்கு இனியாள் வேறு யாரையோ கருதிக் கண்ணீர் வடிக்கின்றான் என எண்ணி) அம்ம - இது என்ன இது!, பிறரை உள்ளி - பிறமாதரை நினைத்து, அழுபவர் - அழுகின்றவர்களை, சேர்தல் - நான் கூடுதல், பேதைமை - மதியீனம், என்றாள் - என்று கூறினாள். (அப்பொழுது) வேதனை பெருகி - துக்கம் அதிகரித்து, வேல் கண் - வேல் போன்ற கூரிய பார்வையையுடைய கண்கள், தீ - கோபத்தால் நெருப்பை, உமிழ்ந்திட்ட - கக்கின.]

கண்கள் தீச்சொரிய அவ்விலக்கணை பூசிய சந்தனத்தையழித்துப் பூமாலையைப் பிய்த்தெறிந்து, நகைகளை எல்லாம் நீக்கிச் சிதறி, மோதிரமணிந்த சிறுவிரல் நெரித்து, விம்மிவிம்மிப் புருவத்தை நெற்றி முற்ற ஏற்றியும் இறக்கியும் நொந்து, தாமரை போன்ற முகம் வியர்த்து நின்றாள்.

இந்நிலை கண்ட அண்ணல் என் செய்வான். அவளுக்குச் சமாதான மொன்றும் சொல்லப் புகவில்லை,

இற்றதென் னாவியென்னா வெரிமணி யிமைக்கும் பஞ்சிச்
சிற்றடிப் போது புல்லித் திருமகன் கிடப்ப......

[இற்றது என் ஆவி என்னா - என் உயிர் போயிற்று என்று, எரிமணி இமைக்கும் - பிரகாசம் பொருந்திய இரத்தினங்கள் ஒளிவீசுவதும், பஞ்சி. செம்பஞ்சிக் குழம்பூட்டியதும் (ஆன அவளது) சிற்றடி போது - பூப் போன்ற சிறிய பாதங்களை, புல்லி - பிடித்துக்கொண்டு, திருமகன் - அவ்வரசகுமாரன், கிடப்ப - கிடக்க]

அவளும் அவனுற்ற இளிவிற்கு இனி ஆற்றாது இளகிய மனத்தாளாய் ஊடல் தீரக்கருதிப் பரிவுடன் நோக்கினள். இதுகண்ட சீவகன் அவளிடத்தில் கருணை

பிறந்த தென்பதுணர்ந்து, " நீயணிந்த அணியெல்லாம் உன்னைச் சார்தலாலேயே ஒளி சிறக்கக் காரணமாகும் பூங்கொடி போல்வாளே, உன் அழகை உற்று நோக்கிய தால் கண் கரித்து நீர் உக நீயதைப் பொறுத்தல் தகாதோ," என உரைக்க அவள் இன்னும் சும்மா இருப்பது கண்டு

" பண்டியான் செய்த பாவப்
பயத்தையார்க் குரைப்பன் றேன்காள்
வண்டுகாள் வருடி நங்கை
வரந்தர மொழிமி னென்றான்.

[பண்டு - முற்காலத்தில், யான் - நான், செய்த - செய்திருக்கின்ற, பாவப் பயத்தை - பாபங்களினுடைய பலனை, யார்க்கு - யாருக்கு, உரைப்பேன் - உரைத்து என் குறைகளைச் சொல்லிக்கொள்வேன். தேன்காள் - வண்டுகளே, வண்டுகாள் - வண்டுகளே, நங்கை - இப் பெண்ணை, வருடி - தடவிக்கொடுத்து, வரம்தா - எனக்குக் கிருபைசெய்ய, மொழிமின் - சொல்லுங்கள், என்றான் - என்று வேண்டிக் கொண்டான்.]

இவ்வேண்டுகோளை, இலக்கணை வளர்க்கக் கூண்டினிலிருந்த,

பூவையுங் கிளியுங் கேட்டுப்
புழைமுகம் வைத்து நோக்கிக்
காவலன் மடந்தை யுள்ளங்
கற்கொலோ விரும்பு கொல்லோ
சாவம்யா முருகி யொன்றுந்
தவறில னருளு நங்கை
பாவையென் றிரத்து மென்ற
பறவை கடம்முட் டாமே.

[பூவையும் - மைனாவும், கிளியும்-கிளியும், கேட்டு-அவ் வார்த்தைகளைக் கேட்டு, புழை - கூண்டின் துளையில், முகம் வைத்து நோக்கி - தம் முகத்தை நீட்டிப்பார்த்து, "காவலன் மடந்தை உள்ளம் - நம்மரசனின் காதலியாகிய இவளது மனம், கல்கொலோ - கல்லோ, இரும்பு கொல்லோ - அல்லது இரும்போ! (நாம் ஊடிய காலத்தில் இவ்வாறு நம் சேவல் வந்து வணங்குமாயின் சகியாது) யாம் உருகி சாவம் - நாம் உருகிச் செத்துப் போவோம்," (என்று) பறவைகள் தம்முள் தாம் - ஒன்றிற்கு ஒன்று சொல்லிக் கொண்டு, (இலக்கணையைக் கூவி,) " நங்கை - நங்கையே, பாவை - பாவை போல்வானே, என்று - என்று, இரத்தும் - வேண்டிக் கொள்கிறோம். தவறு இலன் - இவன் குற்றம் இல்லாதவன், அருளு - ஆகையால் அங்கீகரித்து அருள்வாய், என்ற - என்றன"] அப்பொழுது, அக்கிளியை நோக்கி,

பெற்ற கூழுண்டு நாளும்
பிணியுழந் திருத்தும் பேதாய்
முற்றிமை சொல்லி னங்கை
மூன்றுநா ளடிசில் காட்டாள்
பொற்றொடி தத்தை யீரே
பொத்துநும் வாயை யென்றே
கற்பித்தார் பூவை யார்தங்
காரணக் கிளவி தம்மால்.

[பேதாய் - பேதையே, (நாமோ) பெற்ற கூழ் உண்டு கிடைத்த சோற்றை உண்டு, நாளும் - நாள்தோறும், பிணி உழந்து - கூட்டிலே அகப்பட்டு, இருத்தும் - இருக்கிறோம். (நீ இவ்விதம்) முற்றிமை - புத்திமதிகள், சொல்லின் - சொல்வாயானால், பொற்றொடி நங்கை - பொன்வளையணிந்த நம் இலக்கணை, மூன்று நாள் - மூன்று நாள், (நமக்கு) அடிசில் காட்டாள் - சோறு காட்டமாட்டாள். (ஆகையால்) தத்தையீரே - கிளியாரே, பொத்தும் நும்வாயை -உம் வாயை அடைத்துக் கொள்ளும்," என்று, பூவையார்-ஒரு நாகணவாய்ப் புள், தம் காரணக் கிளவியால் - காரண காரியங்கள் அறிந்த மொழிகளால், கற்பித்தார் - சொல்லிவைத்தார்.]

ஆனால், கிளியோ நடுநிலை நோக்கியதே யன்றித் தன் யாக்கைக்கே இரைதேடாது பூவையார் சொன்னசொல்லைப் போக்கிலே போகவிட்டுப் பின்னும் "நாயகன் பழியேபுரிந்தவன் எனினும் கால்பிடித்து வணங்கிய பின், அவன் ஆராதிக்கும் தெய்வமா யிருந்து வேண்டிய வரத்தைக் கொடுப்பவள்ளல்லளோ குலமகள். கலங்கிய யானைபோன்ற இவனது கவற்சியைக் கருதாதவள் பொன் பறிக்கும் பரத்தையரை நல்லராக்கி விடுகின்றனள்" என அஞ்சாதுரைத்து,

ஈன்றதா யானு மாக விதனைக்கண் டுயிரை வாழே
னன்றியான் சாவ லென்றே நலக்கிளி நூலின் யாப்ப
மான்றவண் மருண்டு நக்காள் வாழிய வரம் பெற்றே
னென்றவ னாரப் புல்லி யணிநலம் பரவி னானே.

[நலக்கிளி - அந்த நல்லகிளி, "ஈன்ற தாயானும் ஆக - இவளைப் பெற்ற தாயேயாய் நான் இருப்பினும் கூட, இதனைக் கண்டு - இவள் செய்யும் கொடுமையைக் கண்டு, உயிர் வாழேன் - உயிர் வைத்திரேன். (ஆகையால்) யான் நான்றி சாவல் - நான் தூக்கிட்டுக் கொண்டு சாவேன்," என்று, நூலின் யாப்ப - (கூட்டில் தொங்கிய) நூலைக் கழுத்தில் கட்டிக்கொள்ள, (அதுகண்டு) மான்றவள் - மனங் கலங்கியவளாகிய இலக்கணை, மருண்டு - திகைத்து, நக்காள் - சிரித்தாள். (உடனே,) ஆன்றவன் சிறந்தவனாகிய சீவகன், " வாழிய - நீ பல்லாண்டு வாழ்வாயாக, வரம் பெற்றேன் - வேண்டிய வரம் உன்னால் பெற்றேன், என்று - என்று கிளிக்குக் கூறி, ஆர புல்லி - நாயகியை மனம்ஆரத் தழுவி, அணி நலம் பரவினான் - அவளது அழகின் சிறப்பைத் துதிப்பவனாயினான்.]

இன்னவாறு தன்நலத்தைப் பற்பலவகையில் அவன் புனைந்துரைக்கக் கேட்ட நங்கையும் கொண்ட வைராக்கியத்தை இன்னும் தாங்க இயலாதவளாய் அவனைப் பார்த்து, நீ என்னழகை,

பாண்குலாய்ப் படுக்கவேண்டா பைங்கிளி பூவையென்னு
மாண்பிலா தாரைவைத்தா ரென்னுரு ரென்றுநக்கு,

[பாண்குலாய்-பாடிக்கொண்டாடி, படுக்கவேண்டாம்- என்னை உன் வசப்படுத்தப் பார்க்கவேண்டாம். பைங்கிளி - பச்சைக்கிளி, பூவை-மைனா, என்னும் - போன்ற, மாண்பிலாதாரை - தாழ்ந்த சந்துக்களை, வைத்தார் - வைத்துக் காப்பாற்றியவர், என் உறுர் - என்ன என்ன தாழ்மைதான் அடையமாட்டார்," என்று, நக்கு - வாய் விட்டுச் சிரித்து]

தன் நகையாடு முகமென்னும் நல்லமுதத்தை நாயகனுக்களிக்க இருவோரும் களிசிறந்து முன்னினும் பதின்மடங்கு மகிழ்வெய்தினர். " மதுகரம் "

லோகோபகாரி

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தா தாரராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திக ளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாய் வெளி வருகிறது. முப்பத்தி நான்காவது ஆண்டு நடக்கிறது. பத்திராதிபர்: பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை. வருஷ சந்தா ரூபாய் 4. வெளிநாடுகளுக்கு ரூபாய் 6.

லோகோபகாரி பத்திரிகாலயம்
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.
மாதிரிப்பிரதி இனாம். (7)

மதிப்புரை.

1. பன்னிரு திருமுறைத் திரட்டு.

அரியநூற்கள் அனேகம் அவ்வப்போது வெளியிட்டு வரும் அலையன்ஸ் கம்பனியார், தங்கள் 103-வது வெளியீடாகப் பிரசுரம் செய்துள திராவிட வேதத் திரட்டு என்னும் இப்புத்தகம் நமது பார்வைக்கு வரப்பெற்றோம். பன்னிரு திருமுறையினின்றும் திருப்புகழினின்றும், சிவரஹஸ்யப் பதிப்பாசிரியராகிய ஸ்ரீமான் கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் அவர்கள் பி.எ., இதிற்கண்ட பாடல்களைத் தொகுத்துள்ளார். இப்பதிப்பு மூன்றாம் பதிப்பு. இதற்கு முன் இரண்டு பதிப்புக்கள் விலையாயிருக்கின்ற வென்றால் இத்தமிழ் நாட்டின்கணுள்ள பக்தியும் சிரத்தையும் குறைவுபட்டுக்கொண்டு வருவது போல் வெளிப் பார்வைக்குத் தோன்றினாலும், திருநாவிற்காசரும் ஞானசம்பந்தரும் சுந்தரமூர்த்தியும் அருணகிரிநாதரும் திருவாய்மலர்ந்த திப்பியப் பாசுரங்களுக்கு அகமுருகி மனமகிழ வயப்படுகின்ற மாந்தர் இன்னும் நம்மிடையே சிலர் இருந்து வருகின்றனர் என்பது தெரிய வருகின்றது. அவர்களல்லாத பலரும் தேவாரத்தைப் பேரளவில் கொண்டாடி விட்டுச் சும்மாயிருந்து விடுவதற்கு முக்கிய காரணம் அவர்களது கைகளில் இத்தகைய புத்தகம் ஒன்று இல்லாத குறையேயாகும். தேவாரச் செய்யுள்களின் பொருள் தெரிந்து கொள்வதுவெகுசுலபம். இந்தப்பதிப்பில் மணிகளுக்குள் சிறந்த மணியைத் தேர்ந்தமைத்தாற்போல் அழகினுள் அழகு தேடிப் பாசுரங்களைத் தொகுத்திருக்கின்றனர். பாடப்பெற்ற இடங்களின் பெருமையும் பாடவந்த வரலாறும் அங்கங்கே சொல்லியும் வருகின்றார். திருவாசகம், திருக்கோவை, திருமந்திரம், திருத்தொண்டர் புராணம் ஆதிய நூல்களிலிருந்து எடுத்துள்ள பாகங்களும் நன்கமைந்துள்ளன.

உள்ளிருக்கும் உயர்ந்த விஷயத்திற்கொப்ப இப்பதிப்பின் காகிதமும் அச்சும் கில்டுடன் கூடிய மேற்கட்டும் உயர்ந்து இருந்து திருமுறை படித்திராதாரையும் படிக்கும்படி தூண்டத்தக்கவை. விலை. ரூ. 3- 8- 0. வேண்டுவோர், அலையன்ஸ் கம்பனி, ஷண்முகவிலாஸம், மைலாப்பூர், சென்னைக்கு எழுதவும்.

2. திரிவேணி.

கலையுணர்விற்கும் காவியங்களுக்கும் சரித்திர தத்துவத்திற்கும் ஆராதனை புரியுமாறு ஆங்கிலபாஷாப் பத்திரிகை யொன்று இவ்வருஷம் பிறந்து எம் கைக்கெட்டியதைக் காணப் பெரிதும் மகிழ்ந்தோம். ஒன்று விட்டோர் மாதமாக வருடத்திற்குச் சஞ்சிகை ஆறு வீதம் வெளிவரும். பற்பல துறைகளில் நம் நாட்டின்கண் தோன்றும் புத்துயிர்க் கிளர்ச்சியின் பொருளை விளங்க வைப்பதும், கலைமகளைப் புலம்பிநின்று வறுமையோடும் சிலவேளை போற்றுவார் ஆங்காங்கு ஆக்குகின்ற அருமை பெறு உரைகள் பிறரறியாமற் போய்விடாது அவைகளை அவரனைய அறிஞர்பால் வெளிப்படுத்தி அன்னோர்க்கு ஆறுதல் அளிப்பதையும் இப்பத்திரிகை தன் நோக்கமாகக் கொண்டுளது. எதனிடத்தில் அன்பும் அறிவும் ஆட்சியும் உற்பத்தியாகின்றனவோ, மற்று எதன்பால் பக்தியும் ஞானமும் கர்மமும் போய்ச் சேருகின்றனவோ, அத் தனிமுதல் பொருளிற்கே தன் பத்திரிகையை அதனாசிரியர் உவகையொடு உரிமை காட்டிச் சமர்ப்பிக்கின்ற வொன்றே, இவ்வுலகிற்கு இதனால் அளவிறந்த பயன் விளையும் என்பதற்குப் பெரியதோர் சான்றாகின்றது.

காரிய சாத்தியமான சிறு செயல்களே கருமத்திற்கு ஏற்றவை என்னும் அற்பச் சூழ்ச்சியை அகற்றிவிட்டு செய்கை முற்றுதற்கு அரியனவாயினும் 'முயன்று பார்ப்போம்' என்னும் பெரும் நினைவிற்கு ஆதாரமாய விஷயங்களைப் போற்றியும் புகட்டியும் வைத்து நம்மை மாசிலாத் தூய நிலைக்கு வழிபடுத்தும் இயக்கம் யாவும் அழகொடு வாய்மை வாய்ந்த இயக்கங்களாகும். மற்றவெலாம் புறத்த, பயனும் இல. திரிவேணி, செய்கை முறையை ஒழித்துக் கருத்தின் நிறைவைக் காப்பதற்கு அமைந்த பான்மையால் அறிஞர் யாவரும் அதனை வரவேற்றுக் கொள்வ ரென்பதிற் சந்தேகம் இல்லை. ஒன்றற்கு ஒன்று இரண்டுமாத தூரத்தில் வெளிவருகின்ற தொன்றே இதன்பால் நாம்கண்ட குறை. கருத்தின தழகிற்கேற்க அச்சும் அழகு, அமைப்பும் அழகு, அதனிலடங்கிய படங்களும் வெகு அழகு. வருட சந்தா ஐந்து ரூபாய், இதற்கு ஆகின்ற செலவிற்கு எவ்வாறு ஈடுதரும் என்று ஐயமுறுகின்றோம்.

முதற் சஞ்சிகையில் அடங்கிய விஷயங்கள் எல்லாம் படிப்பதற்கு இனிமையோடு பயனும் தரத்தக்கப் பெருமைவாய்ந்தன. காவிரியாற்றின் கதியைஆராய்ந்து வரைந்த கட்டுரைக்குச் சென்னைச் சர்வகலாசாலையாரிடமிருந்து சங்கர-பார்வதி பரிசு பெற்ற ஸ்ரீமான் T. G. ஆராமுத ஐயங்கார், பண்டைநாள் இந்தியாவின் வடக்கிலும் தெற்கிலும் கற்சிலை உருவங்கள் இருந்த தன்மையை நன்காராய்ந்தொரு கட்டுரை வரைந்துளர். அவரது தளராமுயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்றோம். வேதங்களில், வருணனை ஒருபோதும் இந்திரனை மறுபோதும் இன்னவிதம் பிற தேவர்களையும் தனிமுதற் பொருளென்று வேறுவேறு வேளைகளில் துதித்திருக்கக் கண்டு அக்காலக் கொள்கையின் வகையறியாமற் திகைப்பவர்க்கு, ஸ்ரீமான் V. நாராயணன், "பண்டைத்தமிழரின் தெய்வங்கள்" என்னும் தலைப்பின்கீழ் கூறியுள்ள சமாதானம் யாவராலும் ஏற்றுக்கொள்ளத் தக்கது. தெலுங்கினின்று சில தமிழினின்று சில கவிகள் ஆங்கிலத்தில் வெகு அழகாய் மொழிபெயர்ந்து வந்திருக்கின்றன. நம் பெண்களிடும் கோலத்தின் தத்துவத்தை Dr. J. H. Cousins ஓர் கட்டுரையில் காட்டியுள்ளார். இன்னவித அரிய பெரிய விஷயங்கள் பல அடங்கியுள்ளன.

எம் கலாநிலயத்தோடு இப்புரசையிலேயே ஒரேகாலத்தில்உடன்தோன்றியதன்மையால் சகோதரினைவினோடு திரிவேணியை வரவேற்கின்றோம். பாஷை வேறாயினும் கருத்துஒன்றுதலால் உடன்பிறந்த உறவுமாறாது. பத்திரிகாசிரியர் ஸ்ரீமான். K. ராமகோடீச்வரராவ் B. A. B. L. அவர்களும் அவரோடு சேர்ந்து இதனை நடத்தும் மற்றவர்களும் உலகினின் நன்றிக்குப் பாத்திராகின்றனர்.

கடிதம்.

கொல்லாமை.

அறநெறிக்கழகத்தைச் சேர்ந்த ஸ்ரீமான், நா.ரா. இரத்தினசபாபதி செட்டியார் எழுதுகின்றார் :—

"வாயில்லாப் பிராணிகளைக் கொல்லற்க."

உயிர் மிக்கமேன்மை யுடையதாம். அதனை எவரும் வாங்கிவிடலாம். எனினும் அதனை ஈதலோ எவராலும் இயலாது. எத்தகையோர்களும் தத்தம் உயிரின்மேல் அன்புபாராட்டி அதனைப் போற்றி வருவதிலேயே மனஞ் செலுத்துகிறார்கள். தம் உயிரை யாவரும் இன்பமாய்ப் போற்றி வருகிறார்கள். அஃது எளியவர் செல்வர் எவருக்கும் ஒன்றேயாகும். அன்றியும் எவ்வகைச் சீவராசிகளுக்கும் ஒன்றேயாகும். ஆகவே, அது நமக்கு எவ்வளவு அருமையாக இருக்கின்றதோ அவ்வளவருமையதேயாம் மாடு, ஆடு, கோழி, பன்றி முதலியவைகளுக்கும். அவைகளோ ஐயறிவின. நாம் நம்முடைய சுகதுக்கங்களை எடுத்துரைக்க வல்லோம். அவைகளோ அத்தகைய வன்மையுடையனவல்ல. அவைகள் நம்மைப்போல் துன்பத்தை யெடுத்துரைக்கவல்லனவன்று. அருளும் அன்பும் இறைவனிடம் எதிர்பார்க்கும் நாமே அருளுமன்புமின்றிக்கொடும்பாதகராயிருப்போமாகில், நாம் எதிர்பார்ப்பனவற்றை எவ்வாறடைவோம்? அருளுமன்பும் ஆருயிரோம்பலும் அல்லவோ, நாம் போற்றத்தக்கன. ஒன்றுமறியாத ஆடு, தன்னிடமிருக்கும் எதனையும் நமக்குக் கொடுக்கின்றது. பாலை மாத்திரமே யன்றித் தன் முதுகின்மேலிருக்கும் உரோமத்தைக் கம்பல மாக்கிக் கொள்ளவும் வயல்களுக்கு உரம்போட எருவும் கொடுக்கிறது. இத்தகைய உதவிபுரியும் பிராணிகள் வலியற்றதா யிருத்தல் கண்டு நாம் அவைகளைக் கொல்லுதல் தகுதியன்று. எளியாரை வலியார் கொல்லுதலோ முறைமை? அல்லது அயல் நின்று கைதந்து காப்பாற்றுதலோ முறைமை? "எளியாரை வலியர் வாட்டின் வலியரை யிருநீர்வைப்பின் அளியறத் தெய்வம்வாட்டும்" அன்றோ? நாம் அவைகளினும் மிக்க வல்வமையுடையவராதல் பற்றி அவைகளைக் கொன்று கடவுளுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கின்றோமென நினைக்கின்றோம். தம்முடைய அருமை மைந்தர்கள் கொலையுண்ணக் கண்டாற் கடவுளுக்கு எவ்விதம் சந்தோஷ முண்டாகும்? மாடு, ஆடு, கோழி, பன்றி முதலியவைகளைப் படைத்து அவற்றை உலகத்தின்கண் இன்பம் நுகரும்படி விடுத்தவர் கடவுள். ஆகவே, மாடு, ஆடு, கோழி, பன்றி முதலியவைகள் அவருடைய பிள்ளைகளாகும். தன் அருமைப் புதல்வர்கள் சாகக்கண்ட தந்தை மனக்களிப் படைதலுண்டோ? தூயதன்மையுந் தூயநெறியுமுடைய அருட் பெருவள்ளலார் கொலையை எவ்விதம் சகிப்பார்? எல்லா நற்குணமும் பொருந்திய ஈசன் கொலையை சிறிதேனும் பொறார். ஒரு நல்ல நரன் பிராணி ஒன்று துன்பப்படுதலைக் காண விரும்புவானா? அவனே விரும்பானேற் அருட்கடலிறைவன் எங்ஙனம் விரும்பும்? மாடு, ஆடு, கோழி, பன்றி முதலியவைகளைக் கொல்வதினால் நீங்கள் செய்த பாவங்களை யொழித்துத் தண்டனையினின்றுந் தப்பி நற்கதி யடையலாமென நினைக்கின்றீர்கள். நாமும், மாடு, ஆடு, கோழி, பன்றி முதலியவைகளும் கடவுளின் குழந்தைகளே. ஒரு பிள்ளை செய்த குற்றத்திற்காக மற்றொரு பிள்ளையைத் தண்டித்தல் தகுதியா? அவ்வித மெந்தத் தகப்பனாயினுஞ் செய்வானா? மனிதன் மாடு, கோழி, பன்றி முதலியவைகளைக் கொன்று தன் பாவத்தைப் போக்க நினைத்தாலும் மனிதனைக் காட்டிலும் பன்மடங்கு அருளும் அன்பும் நடுவு நிலைமையும் பொருந்திய கருணாநிதியாகிய கடவுள் அவனைத் தண்டனையினின்றுந் தவிர்த்து விடுவாரா? ஒருக்காலும் அவ்விதம் விடார். பன்முறையுஞ் சொன்னேன், அவனவன் செய்யுங் குற்றத்திற்கு அவனவனே உத்தரவாதி யாகின்றான். எவனுந் தான் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்ப இவ்வுலகிலாயினும் ஏனைய உலகங்களிலாயினும் பலனை யடைகின்றான் என்பது திண்ணம். இது உண்மை. ஆகவே மாடு, ஆடு, கோழி, பன்றி முதலியவைகளைக் கொல்லாது விடுதலே மிகவுஞ் சால்புடைத்து. "எவ்வறத்தினுங்கொல்லாமை முன்னினிது." ஆகவே இதனை விட்டுவிடுங்கள். இதுபற்றி யன்றோ,

> அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
> னுயிர்செகுத் துண்ணாமை நன்று

என்றார் திருவள்ளுவரும். மேலும், மனிதராயினோர் எவரும் கொலைப்பாவஞ் செய்யாராய்ஊனுண்ணுதலை நீத்துக் காய், கிழங்கு, புல், பூண்டு, தானியாதிகளைப் புசிப்பதை மேற்கொள்வார்களேயானால் உலகமிது எவ்வளவு அழகியதாயும் நேரிதாயுமிருக்கும். ஏனைய உயிர் வாழ்வனவற்றையும் தம்மைப்போலக் கருதுவார்களேயானால் மிக்கஒற்றுமையுண்டாகும். துன்பமும், பிணியும், துக்கமும் மிகவும் நீங்கும். மனிசர் ஒருவருக் கொருவர் போர்புரியாதவராய் ஏனைய மிருகங்களையும் கொல்லாராய் "அறநெறி" வழுவாத் தூய வாழ்க்கையராய் ஒருவர்மே லொருவர் அன்புடையராய் இருப்பரேல் இக்குவலயமே ஓரின்ப வுலகென்பதற்கும் ஐயப்பாடுண்டோ? கருணையுள்ளவருக்கே திருவருள் கிடைக்குமாதலால் இன்றுமுதல் எங்கும் உணவிற்காகவேனும் அல்லது வேள்விக்காகவேனும் அல்லது எவ்வித காரணத்தாலேனும் எவ்வித சீவராசிகளையும் கொல்லலாகாது. கோறல் பாவமாமெனவும் ஒவ்வோருயிரும் தூய்மையான தம்முயிர் போன்றதே எனவும் உறுதியாக அறியவேண்டும். அன்றியும் தேவர் கோட்டங்களிற் பாலும், நெய்யும், கனியும், தேனும், பூவும் நிவேதிக்கப் படுகின்றனவேயன்றி பலியீடு எந்த நிமித்தத்தினாலும் நிகழ்ந்ததில்லை.

வர்த்தமானம்.

இந்தியாவுக்குப் பப்ளிக் ஸ்கூல் :— இந்தியாவிலும் பப்ளிக் ஸ்கூல் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று S. R. தாஸ் என்பவர் அதற்காகப் பணம் சேர்த்துக் கொண்டிருக்கிறார். இந்தஸ்கூல் கட்டுவதற்கும் பின்னால் அதைச் சரிவர நடத்துவதற்கும் முப்பதுலட்சம் ரூபாய் வேண்டுமென்றும் இந்தத் தொகையில் பதினைந்து லட்சத்துக்குமேல் சேர்ந்துவிட்டதென்றும் மார்ச்சுமாத முடிவுக்குள் மிகுதிப் பணமும் சேர்ந்துவிடுமென்றும் சொல்லுகிறார். இது சீக்கிரத்தில் ஸ்தாபனமாகுமாம். ஆனால் இதுவரையில் எந்த இடத்தில் ஸ்தாபனம் செய்வதென்று முடிவாகவில்லை. சரியானவிடத்தில் ஏற்படுத்தினால்தான் எல்லாருக்கும் பிரயோசனப்படும், ஸ்கூலும் விருத்தியடையும். பூனா டேராடூன், பங்களூர் போப்பால் சிம்லா ஆகிய இடங்களின் தகுதியை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அல்லது இவை தவிர வேறு ஏதாவது இடம் சிறந்ததாய்த் தோன்றுமோ என்பது இன்னும் தெரியாது. எந்தஇடம் இந்தியாவின் எல்லாப் பாகங்களிலிருந்தும் சிறுவர்கள்வந்து சேர்ந்து படிப்பதற்குச் சுலபமாயும் மற்றசௌகரியங்களும் வாய்ந்திருப்பதாயுமிருக்குமோ அந்த இடத்தையே தெரிந்துகொள்வார்கள்.

* * *

பிரித்தானிய தேசத்துச் சரக்கு பகிஷ்காரம் :— சென்றவார யங்இந்தியாவில் மகாத்மாகாந்தி பின் வருமாறு எழுதுகிறார் :—'பிரித்தானிய தேசத்துப் பண்டங்களைப் பகிஷ்கரிக்க முடியாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் காங்கிரஸ் கமிட்டியார் திருப்திகரமான செய்வகை துணியாமையே. இது சைனாவில் முற்றுப்பெற்றதே என் இந்தியாவில் முடியாதென்கிறார் சிலர். சைனாவில் இது நிமித்தம் படைத்துணைகொண்ட குழப்பங்கள் நடந்தன. அவ்விதம் இங்கேயும் செய்யலா மென்னும் உள்ளக் கிளர்ச்சி இருந்தகாலத்திலும் எங்களால் அவ்விதம் செய்துமுடிக்க வழியுமில்லை. அதை நடத்தும் திறமையும் இல்லை. மேலும் பிரித்தானிய பண்டங்களைப் பகிஷ்கரிக்க வேண்டு மென்று தூண்டியவர்களாவது அல்லது உதவி மறுத்தல் கமிட்டியாவது இந்த வழியை எண்ணவுமில்லை. ஆகையால் இதுவரையிலும்பிரயோசனமற்றதும் செய்ய இயலாததுமான பிரித்தானிய பண்ட பகிஷ்காரம் என்னும் கூச்சலை விட்டுவிடுவது தேசத்தின் நன்மைக்கும் நன்மதிப்புக்கும் பெருமைக்கும் ஏற்றதாகும். ஆனால் எங்கள் நாட்டிலுள்ள கொள்ளக்கூடிய பொருள்களைப் பற்றி மெய்யான ஸ்வதேசியம் பாராட்ட வேண்டுமென்று எடுத்துக் காட்டுவதற்கு பகிஷ்காரத்துக்கு எதிரான நியாயக்கள் தடையாகா.

நீதிபதி சீனுவர்ஸ ஐயங்கார் :— ஹைக்கோட்டில் ஜட்ஜியாயிருந்த ஸ்ரீமான் வீ. வீ. சீனுவாஸ ஐயங்கார் தமது உத்தியோகத்தை ராஜிராமாச் செய்துவிட்டார். திரும்ப அவர் வக்கிலாக வரப்போகிறாரென்பது பிரஸ்தாபம்.

விவசாயக் கமிஷன் :— விவசாய ராயல் கமிஷன் செலவு பதினாறு லட்சம் ரூபாய் ஆகும் என்றும் சென்ற ஏழு வருஷங்களுள் நடந்த இதுபோன்ற கமிஷன் கமிட்டிகளில் செலவுகள் ஒருகோடி ரூபா வரையில் செலவு ஆயிருக்கிறதென்றும் மதிப்புச்சொல்லுகிறார்கள்.

பகிஷ்காரம் :— இந்த மாதம் 3ம்தேதியும் 17ம் தேதியும் சைமன் கமிஷனை இந்தியர் விரும்பவில்லை என்பதைக் காட்ட நாடெங்கும் ஹர்த்தால் நடத்த வேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறது. பகிஷ்கார கமிட்டியார் தீவிரமான பிரசாரம்செய்து வருகின்றனர்.

சுபாஷ் பாபுவுக்கு நஷ்டஈடு :— சுபாஷ் சந்திர போஸ் 'ஸ்டேட்ஸ்மென்' பத்திரிகைமேல் தொடுத்த மான நஷ்டதாவா கீழ்க் கோர்ட்டில் தள்ளப்பட்டு அப்பீலில் அவருக்கு ஆயிரம் ரூபா நஷ்டஈடும் இரண்டு கோர்ட்டுகளில் ஏற்பட்டசெலவும் கொடுக்கும்படி தீர்ப்பாய் விட்டது.

சம்பந்த முதலியார் :— சின்னக்கோர்ட் நியாயாதிபதியாக விருந்த ராவ் சாகிப் சம்பந்த முதலியார்க்கு உத்தியோககாலம் ஜனவரி 31-ம் தேதியோடு முடிவுக்கு வந்தது. அன்று சாயங்காலம் அவருக்குக் கோர்ட்டில் வந்தன உபசாரங்கள் சொல்லப்பட்டது. அவர் இனிமேல் என்னசெய்ய யோசித்திருக்கிறார் என்பது தெரியவில்லை.

கடற்கரைக் கூட்டம் :— சென்னைக் கடற்கரையில் திலகர் கட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் சைமன் கமிஷன்பகிஷ்கார விஷயமாகக்கூடிய கூட்டத்தைக் கலைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு சில காலிகள் கற்கள், தடி, செருப்பு, கத்திகள் உடைந்தகண்ணாடிகள் முதலியவற்றைக்கொண்டு கூடிய இருந்தவர்கள் பேரில் பிரயோகம்செய்து சச்சரவு உண்டாக்கினார்கள். கூட்டத்தில் வந்திருந்தவர்கள் அனேகருக்குக் காயம்ஏற்பட்டது.

சைமன்கமிஷன் :— சென்னைச் சட்டசபையில் சென்றவாரம் சைமன்கமிஷனுடன் ஒரு விதத்திலும் சட்டசபையாவது அதன் அங்கத்தினராவது சம்பந்தப் படக்கூடாது என்னும் தீர்மானம் வாதிக்கப்பட்டு முடிவில் அறுபத்தோரு அங்கத்தினர் சாதகமாகவும் இருபத்தொன்பதுபேர் அதற்கு எதிராகவும் வாக்களித்தார்கள். பன்னிருவர்தம் அபிப்பிராயத்தை வெளிக்குக் காட்டாமல் பொதுவாய் இருந்து விட்டார்கள். இத் தீர்ப்பு மத்தியமாகாணச் சட்டசபையின் தீர்ப்பை அனுசரித்திருக்கிறது.

பாக்பே நிந்தனை வழக்கு :— இவ்வழக்கு எங்கும் பிரசத்திபெற்று பம்பாயில் அனேக மாதங்களாக நடந்து வந்தது. கார்வே என்பவரால் தன்னை நிந்தித்ததாகக் குற்றஞ் சாட்டபட்ட நாரிமன் என்பர் விடுதலை செய்யப்பட்டார். இந்த வழக்கு உண்டானவிதம் அனேகருக்குத் தெரிந்திருக்கலாம். பம்பாய் பட்டணத்தை விசால மாக்குவதற்காக கரையோரத்தில் சமுத்திரத்தின் ஒருபாகத்தை அணைகோலித் தூர்த்துத் தரையாக்க வேண்டுமென்று, 1921; 1922ம் ஆண்டில் அணைகட்டும் வேலை ஆரம்பித்து கவர்மெண்டார் ஏராளமான பணம் செலவு செய்து வந்தார்கள். வேலையின் சிறிதுபாகம் முடிவதற்குமுன் முழுவேலைக்கும் திட்டம் செய்திருந்த பணம்முழுதும்செலவாகிவிடவேவேலைநிறுத்தப்பட்டது. இதன்காரணத்தை விசாரணை செம்யும்படி ஒரு கமிட்டி ஏற்படுத்தப் பட்டது. இந்தக் கமிட்டிக்குமுன் நாரிமன் என்பவர் வாக்குமூலம் கொடுத்தபோது இந்த வேலையில் சம்பந்தப்பட்ட உயர்ந்த உத்தியோகஸ்தர்களைப் பற்றி நிந்தனையாகச் சொன்னாராம். அதைக் கார்வே என்பவர் தன்னைக் குறித்துச் சொன்னதாக கொண்டு வழக்குத் தொடுத்தார். பலமாத விசாரணைக்குப் பிறகு நீதிபதி நாரிமன் கூறியவை ருசுவானதினால் வழக்கைத் தள்ளி நாரிமனை விடுதலை செய்தார்.

யுனைடட் இந்தியா லைப் அஷ்யுரன்ஸ்

கம்பனி, லிமிடெட்.

(2)

ஹெட் ஆபீஸ் : சென்னை] [1906-வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

பாலிஸிஹோல்டர்களுடைய ட்ரஸ்ட்

பண்ட் சுமார் ரூபா 25 லக்ஷம். 188988

சேர்மன்:—Sir. M. Ct. முத்தய்ய செட்டியார்.

நிர்ப்பயமானது, பேருதவிசெய்வது:—வட்டிக்கு விட்டிருக்கும் தொகையாவும் பத்திரமாயிருப்பதும், பாலிஸிஹோல்டர்களுக்கு வேண்டிய உதவி அன்போடு ஒழுங்காகச்செய்து தருவதும் இந்த யுனைடட் இந்தியா கம்பனிக்கு உள்ள சில முக்கிய அங்கங்கள்.

யுனைடட் இந்தியா கம்பனி சென்னையில் இருப்பது. ஆனால் அதன் கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியுள்ளது. உயிர் அஷ்யுரன்ஸ் கம்பனிகளில் இந்த யுனைடட் இந்தியா கம்பனியானது, "மிகுந்த பலமானதென்றும் பழுதற்றதென்றும் ஒழுங்காயும் மட்டுதிட்டக் கவனத்தோடும் நடத்தப்படுவது" என்றும், இந்த விஷயங்களைச் சீர்தூக்கி அறியவல்ல பேரறிஞர் வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர் கருதுகின்றார்.

காலதாமதம் செய்யாமல் சேரவேண்டியதை அவரவர்களுக்குச் செலுத்திவிடுவது: காரியங்களை மிக்ககவனத்தோடு நிர்வாகம் செய்வது. தாராளமாயும் நியாயமாயும் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிஸி நிபந்தனைகள்: மிதமான பிரீமிய கட்டணம்: தகுந்த போனஸ்: இவைகளும் இவைபோன்ற வசீகரமான மற்ற குணங்களும் யுனைடட் இந்தியா கம்பனியை ஒருவிதத்திலும் குறைவில்லை என்று ஜனங்கள் கொண்டாடத் தக்க ஒரு உயிர் அஷ்யுரன்ஸ் கம்பெனியாகச் செய்து வைத்து இருக்கின்றன.

முக்கியமாக தென் இந்திய ஜனங்களுக்கு உபயோகம் ஆகும்பொருட்டு ஏற்படுத்தியிருப்பது தென்னிந்தியா முழுவதிலும் இந்த யுனைடட் இந்தியா கம்பனி ஒன்றுதான் என்று சொல்லலாம். மிக்க ஒழுங்காகவும் அனுதாபத்தோடும் இங்கே தன் வேலையைச் செய்து வரவேண்டுமென்று இந்தக் கம்பனி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

இதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்க்குக் கேட்டவுடனே யாவும் தெரியப்படுத்துவோம்.

தபால் பெட்டி 281, ஸ்டார் அண்டு கம்பனி

10, மக்லீன் தெரு, சென்னை. மானேஜர்கள்.

(1). இண்டஸ்டிரியல் & புருடன்ஷியல் அஷ்யூரான்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஸ்தாபனம்] தலைமை ஆபீஸ் : பம்பாய். [1913

நன்கு மதிக்கப்பெற்று விருத்தியடையும்

இந்திய லைப் ஆபீஸ்.

போர்டு ஆப் டைரக்டர்கள்.

Sir. லல்லுபாய் ஸமால்தாஸ் K. T. C. I. E. (சேர்மன்) Sir. சிமன்லால் H. ஸெதால் வாட் K. C. I. E.

Sir. ஹுகும் சந்து ஸரூப் சந்து K. T. வேல்ஜி லக்ஷிமி B. A. L. L. B.

மோடிலால் C. ஸேதால்வொட், அட்வகேட் பம்பாய். லால்ஜி நாராயண்ஜி J. B. மில் சொந்தக்காரர்.

கம்பெனியின் முதல் இரண்டு சேர்மன்களும், காலஞ்சென்ற ஸர். பிரோஸிஷா எம். மேத்தா M. A. L L. D. K. C. I. E. யும் காலஞ்சென்ற ஸபூர்ஜி புரோச்சா K. T.

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2,21592.
வசூலிக்கப்படாத மூலதனம் ரூ. 16,25000.

1. பறி முதல் செய்யப்படாத இயற்கையாகவுள்ள உரிமைகள்
2. பாலிஸிஹோல்டர்களே நேரில் கண்காணிப்பதற்காக அவர்களுக்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுக்க உரிமை.
3. குறைந்த அளவு செலவு.
4. பாத்யதைகளை உடனுக்குடன் பைசல் செய்வது.

நல்ல கமிஷனில் வேலை செய்ய, எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.
விவரங்களுக்கு எழுதவும்:—

நாராயிண் தாஸ் கிர்தர்தாஸ்,
உள்ளூர் மானேஜர்,
நெ. 10 மக்ளீன் தெரு, மதராஸ்.

Dr. Orison Swett Marden's
World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calling ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers—Diverted by salary—Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence—Health-building during sleep—Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease—Killing emotions—Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master—Trifles—Courage—Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement—The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

Special Indian Edition Rupee 1-8-0 each

V. KALYANARAM IYER & Co.,
BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Edited and Published by Mr. E. Kumariah, B.A., B.L.